DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1392 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 9, 2022

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

# தற்போது 'நாஜிகளும்', 'ஹிட்லரும்' கைகோர்த்து நடைபோடும் நாடுதான் இலங்கை

## கொழும்பிலிருந்து வி.தேவராஜ் — மூத்த ஊடகவியலாளர் எழுதுகின்றார்



நாட்டையும் மக்களையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இலங்கை நாட்டையும் மக்களையும் படைத்த கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்ற நிலையை தென்னிலங்கை அரசியல்வாதிகள் தோற்றுவித்துவிட்டனர். நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. சாதாரண மக்களை இந்த பொருளாதார நெருக்கடி சிறு நீரகங்களைவிற்று சீவியம் நடத்தும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

(உள்ளே விபரமான கட்டுரை 13ம் பக்கத்தில்)

# IN CELEBRATION OF QUEEN ELIZABETH II's PLATINUM JUBILEE , COMMEMORATIVE PINS AND AWARDS WERE PRESENTED TO RECIPIENTS BY SALMA ZAHID, CURRENT MP FOR SCARBOROUGH CENTRE







கடந்த 4ம் திகதி மாலை கனடா ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றை ஸ்காபுறோ மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சல்மா சாஹிட் இந்த கௌரவிப்பு விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.
கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நல்லதம்பி மற்றும் ஸ்ரான் முத்துலிங்கம், மற்றும் சட்டததரணி திருமதி லக்சுமி வாசன் ஆகியோர் அடங்கலாக பல தமிழ்க் கனடியர்கள் மற்றும் பல்லினங்களைச் சேர்ந்த சேவையாளர்களுக்கு மேற்படி விருதுகள் வழங்கப்பெற்றன.
இங்கே காணப்படும் படங்களில் மேற்படி நாள்வரும் தங்கள் விருதுகளும் பதக்கமும் பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்



# Dr. புஷ்பா வன்னித்தம்பி

## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
Dentist

**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)

**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)

**905-201-8900**




## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### Rich Cakes by Araviram

றிச் கேக் ஆர்டர் செய்ய விரும்பீர்களா?

**Spoil your guests with our delicious Sri Lankan Rich Cakes, they make the perfect treat for any event!**
**Contact:**
**Raguram - 647 648 1154**

### காணி விற்பனைக்கு உள்ளது

யாழ் ராஜ வீதியில் அண்ணளவாக 100m தூரத்தில் 1 1/4 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி 70 Laks ற்கு விற்பனைக்கு உள்ளது. நல்லூர் கோயிலில் இருந்து 5 நிமிடங்களில் காரில் செல்லக்குடிய இடம்.

**விபரங்களுக்கு:**
BASGARAN (416) 335-9335
WhatsApp (cell): (011) 44 7960 460546
shelliah@indoeuro.net

1 1/4 பரப்பில் இருந்து 5 பரப்பு வரை விற்பனைக்கு உள்ள.

### மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, கனடாவில் பிறந்த எனது 29 வயது மகளுக்கு நன்கு படித்த, நற்குணம் கொண்ட மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: RAJ
(647) 293-2784
(phone or text)

### KITCHEN HELPER & LINE COOK WANTED

Part-time kitchen helper, line cook's, dish washer, South Indian cook, Continental cook, ladies South Indian cook wanted.

Call AMAR:
(416) 988-9518

7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

### Basement for Rent

**Denison and Featherstone**
சந்திப்பிற்கு அருகில் உள்ள ஒரு அறை கொண்ட **basement with separate entrance** உடனடியான வாடகைக்கு உண்டு. **Laundry separate.** பெண்கள் விரும்பத்தக்கது.
**Call: John**
**647-965-0754**

### இரண்டு அறைகள் வாடகைக்கு விடப்படும்

2 room for rent in Richmond
(Elginmills & Yonge)

1) One room is full furnished for rent with one parking on the ground floor.

2) One room is fully furnished for rent to female seniors or female students on the first floor.

CONTACT: RAJAH
(416) 454-1893

### TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

### Sapphire Banquet & Catering

---------------------------

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers

**SHIVA SUBRAMANIAM**
**(647) 406-4868**

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ‘இடி’ விழுந்தது போன்ற ஆட்சிக் காலத்தில் இலங்கை மக்களை இயற்கையும் வருத்துகின்றதா?

இலங்கையில் தற்போது நிலவும் மோசமான கால நிலையைக் காரணம் காட்டி மக்களைப் அச்சமடையச் செய்யும் ‘வேலை’யை ஊடகங்கள் செய்து வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளுத. எனினும். இலங்கைத் தீவின் அனைத்துப் பகுதிகளில் மாசடைந்த காற்று வீசுவதாலும் குளிரும் காற்றும் மழையும் சேர்ந்து பூமியைத் தாக்குவதால் போதிய வசதிகளற்ற வீடுகளில் வாழ்ந்து வருபவர்களும் வீடற்றவர்களாக வீதியோரங்களில் குடிசைகள் அமைத்து வாழ்பவர்களும் எவ்வாறான துன்பங்களை அனுபவிப்பார்கள் என்பதை நாம் விபரிக்கத் தேவையில்லை.

நாம் முன்னர் ஒரு இடத்தில் குறிப்பிட்டது போன்று அரசியலில் எதிரிகளாக இருப்பவர்கள் தாங்கள் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மறைமுகமான உடன்படிக்கைகளின் படியே தங்கள் அரசியல் நகர்வைச் செய்கின்றார்கள். இதனால் பாதிப்புக்கள் எந்த வடிவத்தில் வந்தாலும் அரசியல்வாதிகளும் அரசியல் பதவிகளில் உள்ளவர்களும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள். சட்டங்களில் எழுதி வைத்தது போன்று அரசியல் இருப்பு என்பது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றி விடும்.

உதாரணத்திற்கு. மோசமான ஆட்சியை நடத்திய கோட்டாபாயவை நாட்டை விட்டு விரட்டிய போராட்டக்காரர்ள் அடுத்த நகர்விற்காக காத்திருக்கையில் ஏற்கெனவே அரசியல்வாதிகளால் ‘எழுதி வைக்கப்பட்டிருந்த சட்டங்கள்’ ரணில் என்னும் மக்கள் ஆதரவு இல்லாத ஒரு ‘தோல்வியாளரை’ ஜனாதிபதியாக்கியது. தொடர்ந்து, நாட்டை விட்டு தப்பிச் சென்ற ‘தலைவர்’ திரும்பிச் சென்றபோது. அவருக்கு மீண்டும் பாதுகாப்பு வசதியான வாழ்க்கை என்பன வழங்கப்பட்டுள்ளன. இவைதான். ஆரசியல்வாதிகள் தங்களுக்கென்றே எழுதி வைத்துள்ள சட்டங்கள். இதன் பலனை அவர்கள் தங்கள் இறுதிக் காலம் அனுபவீத்துக் கொண்டே இருப்பார்கள் என்பதே நிதர்சனம்.

எமது வாராந்த கட்டுரையாளர் வி.தேவராஜ் அவர்கள் இவ்வாரம் எழுதியுள்ள கட்டுரையானது இலங்கையில் ஆட்சி பீடத்தில் மக்கள் ஆதரவு எதுவுமின்றி அமர்ந்திருக்கும் ஜனாதிபதி என்ற ஆட்சியாளர் அங்கு மக்களை எச்சரிக்கும் விதம் மற்றும் அரசின் அடக்குமுறைகளை ஆயுதங்கள் ஏந்திய இராணுவம் பொலிஸ் போன்ற அரச பயங்கரவாதப் படைகளை கொண்டு அடக்க முனைவதையும் தெளிவாக எடுத்துச் சொல்லியுள்ளார்.

தற்போது அரசின் அடக்குமுறைகளையும் அநியாயங்களையும் எதிர்த்து போராடத் துடிக்கும் உண்மையான போராளிகளை பயங்கரவாதம் என்ற பேரில் தண்டிக்க முயல்கின்றதை எமது கட்டுரையாளர் விபரமாக எழுதியுள்ளார். ரணில் என்னும் நரிக்குணம் கொண்ட ஒரு பொய்யான தலைவரை மக்களுக்கு இனங்காட்டும் வகையில் தேவராஜ் அவர்களின் எழுத்துக்களும் போர்க்குணம் கொண்டவையாகவே காணப்படுகின்றன. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்தது. விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட உடனேயே. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர்களின் நலன்களைக் கவனிக்க ஒரு குழுவை நியமித்தார்! ஆனால் தற்போது ஐ.தே.கவும் மொட்டுக் கட்சியினரும் இணைந்துபோராட்டக்காரர்களை நசுக்குகின்றனர். இது என்ன நியாயம் என்று கேள்வி கேட்கின்றார்.

ஆனால் இவ்வாறான நியாயங்கள் நிறைந்த கேள்விகளை எழுப்பும் தமிழ். சிங்கள மற்றும் ஆங்கில மொழி பத்திரிகையாளர்கள் இலங்கையில் அனைத்துப் பகுதியிலும் குறி வைக்கப்படுகின்றார்கள். மக்களின் குரலா ஒலிக்கும் அவரது குரல்கள் மக்களை அனைத்து கஸ்டங்களிலிருந்தும் காப்பாற்ற வேண்டும் என்ற பொது நோக்கம் கொண்டவை. ஆனால் பிரிந்து நிற்பது போன்று மக்களுக்கு காட்டிவிட்டு ஆட்சி என்னும் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்பவர்கள் உண்மையில் ‘தேசத்திற்கான தலைவர்கள் அல்ல’ என்பதை அனைவரும் அவர்களுக்கு புரிய வைக்க முயல வேண்டும்.

(கடைசிப் பக்கத் தொடர்ச்சி)

# கனடாவில் இயங்கிவரும் "யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய...



சங்கத்தின் தற்போதைய தலைவர் வசந்தகுமார் மகேஸ்வரன் அவர்கள் தலைமையுரையாற்றினார். பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத் தலைவருமான திரு சிவா கணபதிப்பிள்ளை அழைக்கப்பெற்று தனது உரையின் போது பல பயனுள்ள கருத்துக்களை எடுத்துரைத்தார்.

அவர் தனது உரையில் 2007ம் ஆண்டு கனடாவில் இயங்கிவரும் “யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்“ சங்கம் தற்போது கல்லூரியில் கற்றுவரும் பல தரங்களைச் சேர்ந்தவர்களில் “உதவிகள் தேவைப்படும் மாணவர்கள்“ என்ற வகைக்குள் அடங்கும் தங்கள் திட்டத்தினால் இதுவரையில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்றும் எனவே இந்த திட்டத்தை தொடர்ந்த நடத்த சங்கத்தின் நிர்வாகசபை தீர்மானித்துள்ளதாக கூறிய போது சபையில் கரகோசம் எழுந்தது. அத்துடன் மேலும் பயனுள்ள கருத்துக்களை எடுத்துக் கூறிய அவர் தனது உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இராப்போசன விருந்தும் இடம்பெற்றன. இங்கு காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்

------ செய்தி: சத்தியன்- படங்கள் ஈசி 24 நியுஸ் கிருபா--

# அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் 7வயது சிறுமியை கடத்திச் சென்று கொலை செய்த FedEx நிறுவனத்தின் சாரதி

அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் 7வயது சிறுமியை காரணம் எதுவுமின்றி கடத்திச் சென்று கொலை செய்த **FedEx** நிறுவனத்தின் சாரதி ஒருவர் தற்போது சட்டத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார். மேற்படி **FedEx** நிறுவனத்தின் சாரதி அதீனா ஸ்ட்ராண்ட் என்னும் 7 வயது சிறுமியை அவரது வீட்டிலிருந்து கடத்திச் சென்று கழுத்தை நெரித்ததை நீதி மன்றத்தில் ஒப்புக்கொண்டார், அவர் அந்தச் சிறுமியின் டெக்சாஸ் வீட்டிற்கு ஒரு பொதியை விநியோகம் செய்தச் சென்ற போது அந்தச் சிறுமி வீட்டின் முன்புறமாக வந்தபோது மெதுவாக தனது வாகனத்தால் மோதியதாகவும் அதன் காரணமாக பயத்தினால் அந்த சிறுமியை உடனேயே கடத்திச் சென்று கொன்றதாகவும் நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளார்.





கொலையாளியான டேனர் ஹார்னர் நகரத்தின் புலனாய்வுப் பிரிவு பொலிசாரிடம் சம்பவம் பற்றி தெரிவித்த போது. சிறுமி அதீனாவை தனது வாகனம் மெதுவாக மோதியபோது அவர் பின்வாங்கியதாகவும் அப்போது சிறுமி , அதினா மோசமாக காயமடையவில்லை என்றும் என்றாலும், அவர் தனது தந்தையிடம் நடந்ததைச் சொல்வார் என்று பயந்ததால், தான் பீதியடைந்து அவளைப் பலவந்தமாக பிடித்த தனது வாகனத்தில் கடத்திச் சென்று என்று புலனாய்வாளர்களிடம் கூறினார். .

நவம்பர் 30 ஆம் தேதி குழந்தையை கொலை செய்ததாகவே கொலையாளி ஹார்னர் குற்றம் சாட்டப்பட்டுள்ளார், அதே நேரத்தில் அவரது சிறுமியின் உடலான டிசம்பர் 2 ஆம் தேதி வைஸ் கவுண்டியில் உள்ள டிரினிட்டி ஆற்றின் விளிம்பில் உள்ள ஒரு இடத்திலிருந்து மீட்கப்பட்டதுஇ என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் ஓட்டிச் சென்ற **FedEx** வேனுக்குள் இருந்த வீடியோ படக் கருவியானது சிறுமி இறப்பதற்கு முன்பும் அதற்கு குழந்தையை அழைத்துச் சென்றதையும் பதிவில் காட்டி உறுதிப்படுத்தியதாக கைதை மேற்கொண்ட புலனாய்வுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொலையாளி ஹார்னர் பின்னர் புலனாய்வாளர்களிடம் கொலை பற்றி விபரித்த போது, முதலில் சிறுமியின் கழுத்தை நெரித்து கொல்ல முயன்றபோத அந்தச் சிறுமி எதிர்த்து போராடியதாகவும் தெரிவித்துள்ளார்.

டெக்சாஸின் ∴போர்ட் வொர்த்தை சேர்ந்த 31 வயதான இந்த கொலையாளி டிசம்பர் 2 ஆம் தேதி கைது செய்யப்பட்டு வைஸ் கவுண்டி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் 10 வயதுக்குட்பட்ட ஒருவரை கொலை செய்தமை மற்றும் கடத்தல் போன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்த பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

வைஸ் கவுண்டி பொலிஸ் அதிகாரி அகின் கூறுகையில், கொலையாளி ஹார்னர் விசாரணையில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனையை நிறைவேற்றுவது குறித்து தானும் வழக்கறிஞர்களும் கலந்துரையாடியதாகவும் கூறினார்.

அதீனாவின் தாயார் மைட்லின் காண்டி, சந்தேக நபர் தனது வீட்டிற்கு சென்றபோது தான் கிறிஸ்துமஸ் பரிசாக பொம்மைகளை சிறுமிக்கு வாங்குவதற்காக தனது முன்னாள் கணவரின் வீட்டில் இருந்ததாக கவலையுடன் தெரிவித்துள்ளார்

புலனாய்வாளர்கள் வேனுக்குள் இருந்த கேமராக்களிலிருந்து வீடியோ காட்சிகளைப் பெற்றபோது, கொலையாளி ஹன்டர் சிறுமி அதீனாவைப் பிடித்த பிறகு அவளுடன் பேசுவதைக் காட்டியதாக தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வாழைச்சேனை மியான்குளம் பகுதியில் யானை தாக்கியதில் உயிரிழந்த முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மியான்குளம் பகுதியில் யானை தாக்குதலுக்கு இலக்கிய உயிரிழந்த நிலையில் முதியவர் ஒருவர் சடலமாக புதன்கிழமை (07) மீட்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை - பொலன்னறுவை பிரதான வீதியிலுள்ள மியான் குளம் காட்டுப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக அந்த பகுதியில் மாடு மேய்ப்பதற்கு சென்றவர்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று முதியவரின் சடலத்தை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



குறித்த வயோதிபர் அடையாளம் காணப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# "வடக்கு, கிழக்கு, புத்தளத்தில் வாழும் மீனவர்கள் விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த செயற்பாடுகள் தேவை"

## ரிஷாட் எம்.பி வலியுறுத்து!




வடக்கு, கிழக்கு உட்பட புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இதன்மூலம், சரிந்துபோன நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வழிவகை செய்ய முடியும் எனவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் (06) உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், "மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, புல்மோட்டை, வாழைச்சேனை, கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது, ஒலுவில், பொத்துவில், புத்தளம் மற்றும் கல்பிட்டி ஆகிய பகுதிகளில் அதிகமாக வாழும் மீனவர்கள் பலர், தொலைபேசியில் தொடர்புகொண்டு, மீனவத் தொழிலில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தெரிவித்தார்கள். அவர்கள் தற்போது 430 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வாங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர் .ஆனால், ஒரு கிலோ மீனை 400 ரூபாவுக்கு விற்பனை செய்யும் போது, இந்தத் தொழிலில் ஏற்படும் நட்டத்தை சுட்டிக்காட்டினார்கள். இதுதொடர்பில், கடற்றொழில் அமைச்சர் அரசாங்கத்துடன் பேசி, மீனவர்களுக்கு சகாய விலையில் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கும் போதுதான். அவர்களது எதிர்காலம் பாதுகாக்கப்படும். தற்போது மீனவக் குடும்பங்கள் பல இந்தத் தொழிலை நிறுத்தி வருகின்றனர். சிலர் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமல் அவதியுறுகின்றனர்.

அதேபோன்று, இராஜாங்க அமைச்சர் பேசும்போது, பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக கூறினார். ஆனால், எமது பகுதிகளில், அவ்வாறான விடயங்கள் அவ்வளவாக நடைபெறுவதில்லை என்பதை கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடற்றொழில் அமைச்சர் எமது மாகாணத்தை சேர்ந்தவர் என்ற வகையில், வடக்கு, கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, அவர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மன்னார், வங்காலை பிரதேசத்தில் கடலரிப்பு ஏற்பட்டு, கடல்நீர் ஊருக்குள் புகுந்து முக்கியமான கிராமம் அழிந்துபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கடலணைகள் அமைப்பதன் மூலமே இதனை தடுத்து நிறுத்த முடியும். எனவே, அமைச்சர் அவர்கள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அதேபோன்று, நிந்தவூர் பிரதேசத்திலும் கடலரிப்பினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மக்களின் விடயத்திலும் நீங்கள் சிரத்தை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

சுற்றுலாத்துறைக்கு பேர்போன பொத்துவில் பிரதேசம் கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது. எனவே, இப்போதே அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள். அதேபோன்று, கல்பிட்டி துறைமுகத்துக்கும் முகத்துவாரத்துக்கும் இடையில் உள்ள பாலம் ஒன்று உடைந்திருப்பதனால் மீனவச் சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பாலம் அமைக்கும் திட்டத்தின் கீழ், அதன் நிர்மாணப் பணிகள் இடையில் நிறுத்தப்பட்டதனால் அந்தப் பிரதேச மக்களும் க்'டப்படுகின்றனர். இந்த விடயத்திலும் நீங்கள் அக்கறை செலுத்தி, மீனவர்களின் அன்றாட ஜீவனோபாயத்துக்கு உதவ வேண்டும்.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, வாழைச்சேனை ஆகிய இடங்களில் ஆழ்கடலில் மீன்பிடிப்போர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் உங்களை சந்தித்தபோது சில வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்கள். கல்முனை, சாய்ந்தமருது மீனவர்கள் ஐஸ் நிலையம் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். அங்கு எண்ணெய் நிரப்பும் நிலையங்களும் இல்லை. மேலும் வங்காலை, சிலாவத்துறை போன்ற இடங்களிலும் இதேபோன்ற பிரச்சினைகள் நிலவுகின்றன. எனவே, இந்தத் துறைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் தொடர்புகொண்டு, மீனவர்களின் கஷ்டங்களை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும், இந்த உயர்சபையில் பேசிய விவசாயத்துக்கு பொறுப்பான முன்னாள் அமைச்சர் பெரிய வீரர் போன்று உரையாற்றினார். இவர்கள் விவசாயத் தொழில் தொடர்பில் பிழையான முடிவுகளை எடுத்ததனால்தான், இந்த நாடு இவ்வளவு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. கடன்காரராகவும் கையேந்துபவர்களாகவும் நாம் தள்ளப்பட்டமைக்கு, இவர்களின் பிழையான கொள்கைககளே பிரதான காரணம். எனினும். தற்போதையே அரசு விவசாயிகளுக்கு தேவையான உரத்தை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனினும், அது நூறு வீதம் முழுமையடயவில்லை. எனவே, அதனையும் முறையாகச் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன். கிருமிநாசினியின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவற்றை சாதாரண, நியாயமான விலைக்கு வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, மன்னாரில் கட்டுக்கரைகுளம், வியாயடிக்குளம், வவுனியாவில் பாவற்குளம் ஆகிய குளங்களை புனரமைத்து, விவசாயிகளுக்கு போதிய நீர் வசதிகளை செய்துகொடுங்கள். இந்தக் குளங்களை புனரமைப்பதற்கான முதற்கட்ட நிதியை ஒதுக்கி, அவசரமாக இதனை மேற்கொள்ளுங்கள். இந்த சபையிலே "ஹெட் ஓயா" திட்டம் பற்றி பேசப்பட்டது. அதனை முன்னெடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். அதனை நடைமுறைப்படுத்தினால் பொத்துவில் பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைவதோடு, நாட்டின் பொருளாதார விருத்திக்கு அந்தப் பிரதேசம் கைகொடுக்கும் என உறுதியாகக் கூறுகின்றேன்.

அத்துடன், அம்பாறை, வட்டமடு காணிப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. சுமார் 400 ஏக்கர் அளவிலான இந்த விவசாயக் காணிகள் பல வருடங்களாக வனபரிபாலன திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனை விடுவித்து, விவசாயிகளுக்கு வழங்குங்கள். அதேபோன்று, மன்னார், வவுனியா உள்ளிட்ட இன்னும் பல பிரதேசங்களிலும் வனபரிபாலன திணைக்களத்தினால் கபளீகரம் செய்யப்பட்டுள்ள விவசாயக் காணிகளை விடுவித்து, மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்" என்றார்.

# மன்னார் றோட்டறி கழகத்தினர் முன்னெடுத்த தலைமன்னார் கடற்கரை பகுதியினை தூய்மையாக்கும் சிரமதானம்



மன்னார் றோட்டறி கழகத்தின் தலைவர் றொபின் ஜெயரூபன் ஏற்பாட்டில் றோட்டறி கழகத்தில் புதிதாக உள்வாங்கப்பட்ட பாடசாலை மாணவர்களை கொண்ட மன்னார் நகர றோட்டறி கழக இளைஞர்களும் தலைமன்னார் பியர் அ.த.க



பாடசாலை இன்றக்ட் கழக மாணவர்களும் இணைந்து தலைமன்னார் கிராமம் கடற்கரையோரப் பகுதிகளில் புதன்கிழமை (7) காலை 8 மணி தொடக்கம் 10 மணி வரை தூய்மையாக்கும் நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

இதன் போது பிளாஸ்டிக் கழிவுகள், போத்தல்கள் என்பன அகற்றி சுத்தம் செய்யப்பட்டது. இன்றக்ட் கழக பொறுப்பாசிரியர் போல் அவர்களின் தலைமையில் மாணவர்கள் வழி நடத்தப்பட்டனர்.

அத்துடன் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோ கத்தர்களின் பங்களிப்புடன் குறித்த இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்பட்டது.

மேலும் சிரமதான த்திற்கான பைகள் மற்றும் கையுறைகளை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினர் வழங்கியிருந்த மை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் சுத்தமான குடி நீரை நிறைவாக வழங்கும் திட்டத்தை திறந்து வைத்தார் இராஜாங்க அமைச்சர்



கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அவர்களின் வேண்டு கோளின் பேரில் சுத்தமான குடி நீரை நிறைவாக வழங்கும் திட்டத்தை I.S.R.C தனியார் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மடுக்கரைப் பகுதியில் சுமார் 30 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் மக்களின் பாவனைக்கு ஞாயிற்றுக்கிழமை (4) காலை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் குறித்த திட்டத்தை வைபவ ரீதியாக கையளித்தார்.

இந்நிகழ்வில் I.S.R.C நிறுவனத்தின் பணிப்பாளர் மொஹமட் சயாப், I.S.R.C நிறுவனத்தின் ஸ்தாபகரும் முஸ்லிம் ஹேண்ட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜனாப் மிஹ்லார் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தரப்பினர் ஒற்றுமையாக செயற்படுவது அவசியம்

## செல்வம் அடைக்கலநாதன் MP



இனப்பிரச்சினை தீர்வுக்கு தற்போது அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தரப்பினர் ஒற்றுமையாக செயற்படுவது அவசியமானது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (டிச. 03) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, நாட்டில் காலம் காலமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு எந்த அடிப்படையில் தீர்வு எட்ட முடியும் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான பேச்சுவார்த்தை எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறிப்பிட்ட வகையில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெறுமா? என்பதை அறியவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி சபையில் இருந்த அரசியல் கட்சி தலைவர்களிடம் வினவிய போது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டார்கள்.

13 பிளஸ் இணக்கம் தெரிவித்தார்கள். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை முழுமையான அதிகாரங்களுடன் பகிரக்கப்பட வேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கையாக உள்ளது.

அதிகாரங்களுடன் மாகாண சபை செயல்படும் போது எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அனைத்து மாகாணங்களுக்கும் முழுமையாக அதிகாரங்கள் உரித்துடையதாக்கப்பட வேண்டும். இனப்பிரச்சினை என்பது தீர்க்கப்பட வேண்டிய பிரதான விடயம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுக்கு அனைவரும் இணக்கம் தெரிவித்துத்துள்ளதை தமிழ் தரப்பினர் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போது இளம் தலைமுறையினர் இனம், மதம் பேதம் இல்லாமல் ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள். ஆகவே அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள எமது புலம்பெயர் உறவுகளை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைக்கிறார்கள். புலம்பெயர் அமைப்புக்கள் முதலீடு செய்ய வேண்டுமாயின் வங்கிக் கட்டமைப்பு சில விடயங்களை திருத்திக் கொள்ள வேண்டும் என்றார்.


MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தினால் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு தொகை



மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐக்கிய இராச்சியத்தின்) நிதி ஒதுக்கீட்டில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வும், கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் தலைவர் அருட்தந்தை நவரட்ணம் அடிகளார் தலைமையில் சனிக்கிழமை (3) மாலை மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய மண்டபத்தில் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் கல்வி ரீதியில் ஊக்குவிப்பு தேவைப்படும் 51 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நிதி உதவி வருடம் தோறும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தினால் வழங்கி வைக்கப்படும் நிலையில் 2023 ஆண்டுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு பெறும் மாணவர்களின் குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட விவிலிய ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்கலாநிதி கிறிஸ்ரி ரூபன் பெர்னாண்டோ அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கிறிஸ்தவ வாலிபர் முன்னணி (YMCA) அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் பிரதிநிதிகள் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**



# அத்தியாவசிய மருந்துகள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய கோரி மன்னாரில் போராட்டம்




அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் என கோரி இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை முன் வைத்து கவனயீர்ப்பு போராட்டம் செவ்வாய்க்கிழமை (06) வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மன்னாரிலும் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சுற்று வட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கிராமிய மீனவப் பெண்கள், மாதர் ஒன்றியங்கள் ,பெண்கள் வலையமைப்பினர், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் அமைப்புக்கள் போன்ற அமைப்புகளில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் சிலர் கருத்துத் தெரிவிக்கும் போது, இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கடந்த கால கொவிட் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் இந்த நேரத்தில் தற்போது இலங்கையில் அநேக மக்களுக்குத் தேவைப்படும் மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் முழுமையாக கிடைக்கப் பெறாத நிலையில் உள்ளது.

இது மக்களின் அடிப்படை சுகாதார உரிமையினை அனுபவிக்க முடியாத நிலையை காட்டுகிறது.




மேலும் சாதாரண நோய் மற்றும் சத்திர சிகிச்சைகள் போன்றவற்றிற்கான மருந்துப் பொருட்களும் மருத்துவ சாதனங்களும் தட்டுப்பாடாக உள்ளது. நாய், பூனை மற்றும் பாம்பு தீண்டல்களுக்கு மருந்துகள் கிடைக்கப் பெறுவது கடினமாக உள்ளது.

அத்துடன் இவ்வாறான தேவைகள் கிடைக்கப் பெறாத எல்லைக் கிராமங்கள் அண்டிய பிரதேச வாழ் மக்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்கள் என்பதை நாட்டின் ஜனாதிபதி அவர்களுக்கு இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மூலம் தெரிவிக்கிறோம் என தெரிவித்தனர்.



இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் மன்னார் மெசிடோ பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் போதை பொருள் தடுப்பு பரிசோதனை



மன்னார் மாவட்டத்தில், வைத்தியசாலைகள், பாடசாலைகள் உள்ளடங்களான பல இடங்களில் மோப்ப நாய்களின் உதவியுடன் விசேட போதை பொருள் பரிசோதனைகளில் மன்னார் பொலிஸார் வியாழக்கிழமை (8) முன்னெடுத்தனர்.

வடமாண ரீதியாக போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அதியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் வியாழக்கிழமை அதிகாலை தொடக்கம் வீதிகள், பாடசாலைகள், பொது இடங்களில் குறித்த பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக பாடசாலை சூழலில் போதைப்பொருள் பாவனை அறிகுறிகள் காணப்படுகிறதா? என்பது தொடர்பிலும் மோப்ப நாய்களின் உதவியுடன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரிசோதனை தொடர்ச்சியாக அனைத்து பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் மேற் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மடு பொலிஸ் பிரிவில் திருட்டுச் சம்பவத்துடன் ஈடுபட்ட 4 நபர்கள் கைது – 10 லட்சம் ரூபாய் பெறுமதியான திருட்டு பொருட்கள் மீட்பு



மடு பொலிஸ் பிரிவில் கடந்த செப்டம்பர் மாதம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களிடம் இருந்து திருடப்பட்ட சுமார் 10 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் வியாழக்கிழமை (8) மீட்கப்பட்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மடு பொலிஸ் பிரிவில் உள்ள இரணையிலுப்பைக்குளம் பகுதியில் கடந்த செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் குறித்து குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் உடனடியாக மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டை அடுத்து மடு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராஜபக்ஷ தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த மடு பொலிஸார் வியாழக்கிழமை (8) திருடப்பட்ட சுமார் 10 லட்சம் பெறுமதியான பொருட்களுடன் 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் தற்போது மடு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணையின் பின் சந்தேக நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்தனர்.

**- மன்னார் நிருபர்**

# தென்மராட்சி கல்விவலயத்திலுள்ள 10 பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம் (IFTF-Canada) அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA) இரட்ணம் பவுண்டேசன் (Ratnam Foundation-UK) எனும் அமைப்புக்களினால் தென்மராட்சி கல்விவலயத்தில் திறன் பலகைகளினூடான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

வலயக் கல்விப்பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக இவ்வமைப்புக்களால் 10 பாடசாலைகளுக்கான திறன்பலகைகள், குறும்தூர ஊடக எறியற் கருவிகள், மடிக்கணினிகள், ஆசிரியர்களுக்கான விரலிகள் வழங்கப்பட்டது மட்டுமன்றி 40 இற்கும் மேற்பட்ட மேற்குறித்த பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விப்புலம் சார்ந்த இவ்வலய உத்தியோகத்தர்கள் அனைவருக்குமான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஆரம்ப கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி அணியினரென இரு குழுக்களாக்கப்பட்டு ஈதக்சலாவ வளவார் குழாத்தினால் மூன்று நாட்கள் கொண்ட பயிற்சியாக திட்டமிடப்பட்டு இரு நாள் பயிற்சிகள் நிறைவடைந்துள்ள நிலையில் பாடசாலைகளில் திறன்பலகை மூலம் கற்பிக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. மூன்றாம் நாள் பயிற்சியில் இணையவழி பயன்பாடு மற்றும் மாணவரின் சிந்தனைக் கிளரலினூடான சிறந்த செயலூக்க கற்பித்தல் முறைகள் விளக்கப்படவுள்ளன.

இவற்றை வலுப்படுத்து முகமாக கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மற்றும் எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாசாலையில் கல்வி பண்பாடு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. இ. வரதீஸ்வரன், வலயக்கல்வி பணிப்பாளர் திரு. த. கிருபாகரன், பிரதிக்கல்வி பணிப்பாளர் திரு. மு. ஜெகதாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் IMHO-USA அமைப்பின் வதிவிட பணிப்பாளருமாகிய திரு. சு. கிருஷ்ணகுமார் ஆகியோரின் பிரசின்னத்தில் திறன் வகுப்பறைகள் உத்தியோக பூர்வமாக சென்ற வாரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைதோறும் திறன்பலகை செயற்பாடுகளை மதிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும் பணி இவ்வலயத்தின் தகவல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் திருமதி. உ. சிவநங்கை அவர்களிடம் வலயக்கல்வி பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கும் தமது அன்றாட செயற்பாடுகளை வெளிப்படுத்த வாட்ஸ்அப் குழுமமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சிறப்பானதோர் விடயமாகும்.







# மக்களின் கால்நடை வாழ்வாதாரங்களை கடத்தி இறைச்சிக்கு பயன்படுத்திய இருவர் கைது!




**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குற்பட்ட பாண்டியன்குளம் பகுதியில் பிரதேச மக்களின் கால்நடை வாழ்வாதாரங்களை கடத்தி இறைச்சிக்கு பயன்படுத்திய இருவர் நட்டாங்கண்டல் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களில் குறித்த பிரதேச செயலகத்திற்குற்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக மக்களின் கால்நடை வாழ்வாதாரங்கள் காணாமல் போகின்றமையும், போலீசார் குறித்த சம்பவங்கள் தொடர்பில் அசண்டையீனமாக இருக்கின்றனர் என பொதுமக்களால் குற்றச்சாட்டுக்கள் பரவலாக முனவைக்கப்பட்டு வரும் வேளையில் இன்றைய தினம் குறித்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கால்நடை உரிமையாளரினால் நட்டாங்கண்டல் போலீஸ் நிலையத்தில் தனது கால்நடை காணவில்லை களவாடப்பட்டுள்ளது என்ற முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட நட்டாங்கண்டல் போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ரத்னநாயக தலைமையிலான போலீஸ் குழு, மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை அடுத்து போலீஸ் கான்ஸ்டபிள் ரத்னனாயக, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெயப்பிரியன், போலீஸ் கான்ஸ்டபிள் ஜெயதிலக மற்றும் பாண்டார ஆகிய பொலிஸ் குழு மேற்குறித்த கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் அதே இடத்தை சேர்ந்த 17 மற்றும் 27 வயதுடைய இருவர் கைதாகியுள்ளதுடன் கைது செய்யப்பட்ட இருவரையும் நாளைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நட்டாங்கண்டல் போலீசார் தெரிவித்தனர்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS

RRSP
RESP
TFSA

Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிற்கு எப்போது தகுந்த தண்டனை கிடைக்கும்."



## நீதிமன்றத்திற்கு முன்பாக நின்று உரத்த குரத்தில் தெரிவித்த ஹிஷாலினியின் உறவினர்கள்

கடந்த வருடம் இலங்கையின் முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களது கொழும்பு இல்லத்தில் பணிப்பெண்ணாக கடமை புரிந்த 16 வயதுடைய ஹிஷாலினி என்ற சிறுமி தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார் என்ற செய்தி இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பேசப்படும் ஒரு செய்தியாக இருந்தது.

இலங்கையின் மலையகத்தைச் சேர்ந்தடயகம பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுமி வீட்டின் வறுமை காரணமாக முன்னாள் அமைச்சரின் வீட்டில் பணிப்பெண்ணாக பணி புரிந்து வந்த நிலையில் உடலில் தீ பரவி தீக்காயங்களுடன் உயிரிழந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது உறவினர்கள் சிலர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சிறுமியின் மரணம் தொடர்பான சம்பவத்தில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சிறுமி ஹிஷாலினியின் மரணத்தின் பின்னர் சமூக மட்டத்தில் இந்த சம்பவத்திற்கெதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் முன்னாள் அமைச்சரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் சிறுமியின் மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்ற கேள்வி பலர் மத்தியிலும் நிலவி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்க. முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய கொழும்பு இல்லத்தில் வீட்டு வேலைக்கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி ஜூட் குமார் ஹிஷாலினியின் மரணம் தொடர்பிலான மரண விசாரணை சாட்சிப்பதிவுகள் அடுத்த வருடம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி வழக்கு விசாரணைகளுக்காக கொழும்பு நீதி மன்றத்திற்கு வந்திருந்த உயிரிழந்த ஹிஷாலினியின் உறவினர்கள் சிலர் "முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிற்கு எப்போது தகுந்த தண்டனை கிடைக்கும். அவரும் அவருடைய மனைவி உட்பட உறவினர்கள் அனைவரும் சிறைக்கு அனுப்பட வேண்டும். அந்த நாளுக்காக நாம் காத்திருக்கின்றோம்" என்று நீதி மன்றத்திற்கு முன்பாக நின்று உரத்த குரத்தில் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்ததாகவும் எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

ஹிஷாலினி உயிரிழப்பு சம்பவம் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜிந்ரா ஜயசூரிய முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மரண விசாரணை சாட்சிப் பதிவுக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 4 ஆம் இலக்க சாட்சியாளரின் சாட்சியத்தைப் பெற்றுக்கொள்ள, தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியாமல் போனமையினால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வழக்கின் மரண விசாரணை சாட்சிப் பதிவுகள் எதிர்வரும் 2023 ஜனவரி 10 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் பல ஆண்டுகளாக சமய நல்லிணக்கத் திட்டத்தை அமுல் படுத்தி வரும் "கறிற்றாஸ் வாழ்வுதயம்"



கறிற்றாஸ் வாழ்வுதயம் கடந்த பல ஆண்டுகளாக சமய நல்லிணக்கத்திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் அமுல் படுத்தி வருகின்றது. சமய முரண்பாடுகள் பல கோணங்களில் தூண்டப்பட்டாலும் இந்தச் சமய நல்லிணக்கத் திட்டமானது அந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காணவும், சமய ஒற்றுமையை வளர்க்கவும் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அரசியல் நோக்கங்களை பின்புலமாகக் கொண்டு அசௌகரியங்கள் உருவாக்கப்பட்டாலும் சாதாரண மக்களை தெளிவூட்டி சமாதானப் படுத்துவதில் இத்திட்டம் பாரிய பங்களிப்புச் செய்கின்றது.

### சமய நல்லிணக்க குழுக்கள் உருவாக்கம்

தெரிவு செய்யப்பட்ட இலக்கு கிராமங்களில் (அளவக்கை, செம்மண் தீவு, அடம்பன், ஆண்டான்குளம், வட்டக்கண்டல்) இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் சமயங்களைச் சேர்ந்த மக்களை ஒன்று திரட்டி அரச அதிகாரிகளின் உதவியுடன் கிராம மட்ட சமய நல்லிணக்க குழுக்கள், சிறுவர் குழுக்கள், இளையோர் குழுக்கள், மாவட்ட மட்ட ஆலோசனைக் குழு என பல பயனுள்ள செயற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விசேடமாக, சமய நல்லிணக்க குழுக்களின் சிறப்பான செயல்பாடுகள் பல சமூகமட்ட அமைப்புகளுக்கு சவாலானதும், எடுத்துக் காட்டும் ஆகும். மாதாந்தக் கூட்டம் நடாத்துதல், அங்கத்தவர்களுக்கு பயனுள்ள கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், மாலை நேர வகுப்புகளை மேற்பார்வை செய்தல், சமய விழாக்களை முன்னின்று நடாத்துதல், பொது நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குதல், நோயாளர்களை பார்வையிடுதல், சமய ஸ்தலங்களைத் தரிசித்தல், சமயங்களுக்கு இடையில் பகிர்வு, உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர்களின் உறவுகள் இறந்தால் சமைத்த உணவு வழங்குதல், நோயாளர்களை பார்வையிடுதல் என்பனவாகும். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எனும் வேறுபாடுகள் இன்றி சிறுவர்களும், இளையோரும், பெரியோரும் ஒரே குடும்பமாக, உறவுகளாக, நண்பர்களாக இணைந்திருப்பது சமய நல்லிணக்கத்தின் ஆரோக்கியமான அறிகுறியாகும்.

### மாவட்ட மட்ட சமய நல்லிணக்க ஆலோசனைக்குழு.

இஸ்லாமிய மௌலவிகள், பௌத்த பிக்கு, கிறிஸ்தவ அருட்தந்தையர்கள், இந்துக்குருக்கள் என நான்கு சமயத் தலைவர்கள் உட்பட இலக்கு கிராம அலுவலர்கள், ஊடகவியலாளர்கள், கிராம மட்ட சமய நல்லிணக்கக் குழுக்களின் பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும் இவர்களின் கூட்டத்தில் சமூகப்பிரச்சனைகள், சமய முரண்பாட்டை தோற்றுவிக்கும் கிராமிய செயற்பாடுகள், சமய நல்லிணக்கத்திற்கான ஆலோசனைகள் என்பன கலந்துரையாடப்படும். இரு சமய மக்களுக்கு இடையிலான காணிப் பிரச்சினைகள், அல்லது வேறு முரண்பாடுகள் என்றால் இந்த ஆலோசனைக்குழு அவர்களைச் சந்தித்து பிரச்சனைகளுக்கான தீர்வுகள், சுமூகமான முடிவுகளை வழங்கும்.

### அனர்த்த கால உதவிகள்

கோவிட் தொற்று உச்சக்கட்டத்தை அடைந்து மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்ட காலப்பகுதியில் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும், வழிகாட்டுதல் களிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன மத பேதமின்றி உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் மக்களை பாதுகாக்கும் நோக்குடன் விழிப்புணர்வுகள் நடாத்தப்பட்டன, பொது இடங்களிலும், சமய ஸ்தலங்களிலும் கைகழுவும் தொட்டிகள் அமைக்கப்பட்டன. கோவிட் தடுப்பூசி போடுவதற்கு மக்களை அணி திரட்டுவதற்கும், ஊக்கப் படுத்துவதற்கும் சமய நல்லிணக்க அணியினரும், இலக்கு கிராம மக்களும் அரச அதிகாரிகளுடன் இணைந்து பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

தடுப்பூசி போடுவதற்கு மருத்துவ அதிகாரிகள் இலக்கு கிராமங்களை அடைந்தபோது சமய நல்லிணக்க குழு உறுப்பினர்கள் தம்மால் முடிந்த உதவிகளை புரிந்தார்கள். மக்களை ஒழுங்குபடுத்துதல், இடங்களைத் தயார்படுத்துதல், உணவு வழங்குதல், தகவல்களை சேகரித்தல் முதலான செயற்பாடுகளிலும் ஈடுபட்டார்கள்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட நெருக்கமான உறவின் காரணமாக சமய நல்லிணக்க குழுக்கள் பொதுச் சுகாதார அதிகாரிகளை தமது மாதாந்த கூட்டங்களுக்கு அழைத்து மக்களுக்கு விழிப்புணர்வுகளை நடாத்தினார்கள். முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், இடைவெளி பேணுதல் முதலான கருத்தூட்டல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

மிகவும் இறுக்கமான காலகட்டங்களில் பொதுக்கூட்டங்களை தவிர்த்து சிறு சிறு குழுக்களாக சில உறுப்பினர்களின் வீடுகளிலும் இந்த விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன. மக்கள் சமய வேறுபாடுகள் இன்றி ஒரே சமூகமாக இவற்றில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அரசின் புதிய கொள்கையாக ரசாயன உரம் தடை செய்யப்பட்ட போது இந்நிறுவனம் சமய நல்லிணக்க திட்டத்தின் ஊடாக கூட்டுப்பசளை தயாரித்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், பாரம்பரிய விதை உற்பத்தி, சேமிப்பு, பண்டைமாற்று முறைமைகள் முதலான விடயங்களை முன் நிறுத்தி விழிப்புணர்வுகள் ஊட்டப்பட்டன. இப்படியான பல செயற்பாடுகள் காலத்தின் தேவைக்கும், மக்களின் மேம்பாட்டிற்குமாக முன்னெடுக்கப்பட்டன, இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### சமய விழாக் கொண்டாட்டங்கள்

ஒளிவிழா, றம்ழான், தீபாவளி, தமிழ்-சிங்களப் புத்தாண்டு முதலான சமயம் சார் பொது விழாக் கொண்டாட்டங்கள் முன் னெடுக்கப்படுவதன் சிறப்பு யாதெனில் தீபாவளி ஆயத்தங்களில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஈடுபடுவதும், றம்ழான் கொண்டாட்டத்தில் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் தலைமைதாங்குவதும், ஒளிவிழா நிகழ்வுகளை இந்துக்கள், இஸ்லாமியர்கள் முன் நின்று நடத்துவதும் ஒற்றுமை, சகோதரத்துவம், சமாதானம் என்பவற்றின் வெளிப்பாடாக கொள்ள முடியும்.

றம்ழான் கொண்டாட்டத்தின்போது கிறிஸ்தவர்களும், இந்துக்களும் பள்ளிவாசல் உள்ளே சென்று பண்டிகை உணவுகளைப் பரிமாறி, உறவுகளைப் புதுப்பித்து உருவான உணர்வுகளை மறக்க முடியாத ஒன்றாக பலரும் பகிர்ந்து கொண்டமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒளிவிழா நிகழ்விற்கு இந்துக்கள் இயேசு பிறப்பு கதை எழுதி நாடகமாக்கி அரங்கேற்றியமை பலராலும் பாராட்டப்பட்ட ஒன்றாகும். இந்தக் கொண்டாட்டங்களில் நிகழ்த்தப்படும் சமயத் தலைவர்களின் உரைகள் அனைவரும் அனைத்து சமயங்களின் விழுமியங்களையும், பொதுத்தன்மைகளையும், தனிச்சிறப்பு களையும் அறிந்து கொள்ள வாய்ப்பு உருவாகிறது.

குறிப்பாக, சிறுவர்களும், இளையோரும் இந்தக் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கெடுப்பது மன்னார் மாவட்டத்தின் எதிர்கால சமய நல்லிணக்கதிற்கு இப்போது இடப்படும் உறுதியான அத்திவாரம் ஆகும். சிறுவர்கள் இந்தக் கொண்டாட்ட நாட்களில் தமது பிறசமய நண்பர்களின் வீடுகளுக்கு செல்லுதல், மகிழ்ச்சியில் பங்கெடுத்தல், நட்பை ஆழப்படுத்தல் பார்ப்பதற்கு அழகும், உறவுக்கு வழியுமாக அமைந்துவிடுகிறது இந்தக் கொண்டாட்டங்கள்.

**- மன்னார் நிருபர்**



# கனடா இந்து

CANADA HINDU

Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648

# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**ரொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

## துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் ரொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS"**
**V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**

உ
சிவமயம்

ராமநாத இந்துமத கிரியாபீடம்

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்

வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்

647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755



# பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தையை தொடங்கப் போகிறார் என்று தெரிகிறது. பெரும்பாலும் வரும் வாரம் பேச்சுவார்த்தைகள் நடக்கலாம் என்றும் தெரிகிறது. ரணில் விக்கிரமசிங்க ஒரு தந்திரசாலி என்ற படிமம் தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. எனவே அவரை நம்பி ஏமாந்தோம் என்று இனிச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் "நம்ப நட நம்பி நடவாதே" என்ற தமிழ் பழமொழிக்கு இணங்க தமிழ்த் தரப்பு ரணில் விக்ரமசிங்க மற்றும் மேற்குலகம் இந்தியா ஆகிய மூன்று தரப்புகளையும் நம்ப வைக்கும் விதத்தில் சில நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். வெளித் தரப்புகளையும் கொழும்பையும் நம்பவைப்பது என்பது, சரணடைவது அல்ல. யதார்த்தத்தை நோக்கி கனவுகளை வளைப்பதும் அல்ல. மாறாக கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைப்பதற்குரிய மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொள்வதுதான்.

எனவே பேச்சுவார்த்தை மேசைக்குப் போக முன்பு, தமிழ்த் தரப்பு தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழ்த் தரப்பு தன்னை எவ்வாறு தயார்படுத்துவது?

முதலாவதாக, பேச்சுவார்த்தைகள் ஒரு பொறியாக மாறுவதை தடுப்பதற்கு நிபுணத்துவ ஆலோசனையை பெறலாம். அதற்கு நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை உருவாக்கலாம். தமிழ் அரசியல் பெருமளவுக்கு சட்டவாளர்களின் அரசியலாகவே காணப்படுகிறது. சட்டம் ஒரு ஒழுக்கம்தான். சட்டம் தெரியும் என்பதற்காக எல்லாமும் தெரியும் என்று பொருள் அல்ல. பேச்சுவார்த்தை என்பது பல துறைகள் இணைந்த ஒரு கூட்டு ஒழுக்கம். அதனால் துறைசார் நிபுணர்களை ஒருங்கிணைத்து ஒரு நிபுணர் குழுவை உருவாக்கி, அந்த நிபுணர்குழுவின் ஆலோசனைப்படி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, தமிழ் மக்கள் ஒரு தரப்பாக தங்களுக்கு இடையே ஆகக்கூடிய பட்ச ஒன்றிணைவை ஏற்படுத்த வேண்டும். ஒற்றையாட்சிக்கு எதிரான சமரசமற்ற ஒரு பொதுவான கோரிக்கையை முன்வைக்கும் விடயத்தில் தமிழ் கட்சிகள் தங்களுக்கு இடையே ஒன்றுபட வேண்டும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விலகி நின்றால், அதுவும் நன்மைக்கே. பேச்சுவார்த்தைகளின் போது ஏனைய கட்சிகள் கோரிக்கைகளை கைவிடும் ஒரு நிலைமை வந்தாலோ, அல்லது வெளி நிர்ப்பந்தங்களுக்கு சரணடையும் ஒரு நிலை வந்தாலோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதை எதிர்க்கும், அம்பலப்படுத்தும். எனவே வெளியில் ஒரு கட்சி நிற்பதும் நல்லது. வெளியே நிற்கும் கட்சி கடுமையாக எதிர்க்கிறது, எனவே நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது. அப்படி விட்டுக்கொடுத்தால் அது எங்களுடைய வாக்கு வங்கியை பாதிக்கும் என்று ஏனைய கட்சிகள், அதைத் தமது பேர பலமாகப் பயன்படுத்தலாம். எனவே, ஒரு கட்சி வெளியிலேயே நிற்குமானால் அதை எதிர்க்கணியமாகப் பார்க்கத் தேவையில்லை.

மூன்றாவதாக, பேச்சுவார்த்தைகளின்போது ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தைக் கேட்க வேண்டும். அது மத்தியஸ்தமா அல்லது அனுசரணையா அல்லது வேறு எதுவுமா என்பதை அரசாங்கமும் தமிழ்த் தரப்பும் கலந்து பேசி தீர்மானிக்கலாம். ஆனால் ஒரு மூன்றாவது தரப்பின் கண்காணிப்பும் பிரசன்னமும் அவசியம். ஏனென்றால் இனப்பிரச்சினையின் வரலாறு தமிழ் மக்களுக்கு கற்றுக் கொடுத்த பாடம் அது. கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் சிங்களத் தரப்போடு தமிழ்த் தரப்பு எழுதிக் கொண்ட உடன்படிக்கைகளில் ஒப்பீட்டளவில் நீடித்த காலம் நிலைத்திருந்த உடன்படிக்கைகள் இரண்டு. ஒன்று இந்தோ-ஸ்ரீலங்கா உடன்படிக்கை. இரண்டாவது ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை. இவ்விரண்டு உடன்படிக்கைகளின் போதும் மூன்றாவது தரப்புகளின் பிரசன்னம் இருந்தன. இந்திய இலங்கை உடன்படிக்கையின் போது அமைதிப்படை நாட்டுக்குள் இறங்கியது. ரணில் பிரபாகரன் உடன்படிக்கையை கண்காணிக்க ஸ்கன்டிநேவிய யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு இறக்கப்பட்டது. இந்த இரண்டையும் தவிர மூன்றாவதாக கூறக்கூடியது 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட பொறுப்பு கூறலுக்கான 30/1 தீர்மானம். அது பொறுப்புகூறலுக்கு இலங்கை அரசாங்கத்தையும் பங்காளியாக்கியது. தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்தது. ஆனால் எங்கே பிசகியது என்றால், ஐநா ஒரு மூன்றாவது தரப்பாக முழுமையாக அங்கே செயல்படவில்லை என்பதில்தான். அதனால் அந்த உடன்படிக்கையை 2018இல் அந்த உடன்படிக்கையின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன காட்டிக் கொடுத்தார்.

மேற்கண்ட மூன்று உடன்படிக்கைகளிலும் ஏதோ ஒரு மூன்றாவது தரப்பின் பிரசன்னம் இருந்திருக்கிறது. அதிலும் முதல் இரண்டு உடன்படிக்கைகளின் போதும் மூன்றாவது தரப்பின் மிகத் துலக்கமான பிரசன்னம் இருந்தது. எனவே மூன்றாவது தரப்பொன்றின் பிரசன்னம் இன்றி இலங்கைத்தீவில் பேச்சு வார்த்தைகள் நடக்கக்கூடாது. மூன்றாவது தரப்பு எது என்பதனை இரண்டு தரப்பும் கூடித் தீர்மானிக்கலாம். பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று ரணில் விக்ரமசிங்க அழைக்கத் தொடங்கியபோதே அவர் ஒரு விடயத்தை அதோடு சேர்த்து கூறுகிறார். என்னவென்றால் வெளித்தரப்பின் தலையீடு இன்றிப் பேசுவோம் என்று.அதைத் தமிழ்த் தரப்பு ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் போரில் வெற்றி பெறுவதற்கு அவர்களுக்கு வெளித்தரப்பு தேவைப்பட்டது. வெளித்தரப்பின் ஒத்துழைப்பின்றி அவர்கள் போரை வென்றிருக்கவே முடியாது. ஆனால் சமாதானத்துக்கு மட்டும் அவர்கள் வெளித்தரப்பு வேண்டாம் என்று கூறுகிறார்கள். இது ஒரு தந்திரம். இனப்பிரச்சினையை சர்வதேசமய நீக்கம் செய்யும் ஒரு தந்திரம்.

எல்லா இனப்பிரச்சினைகளும் சாராம்சத்தில் புவிசார் அரசியல் பிரச்சினைகள் தான். புவிசார் அரசியல் தலையீடுகள் இன்றி இனப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் அவ்வாறு தீர்க்கப்பட்ட பெரும்பாலான இனப்பிரச்சினைகளில் மூன்றாவது தரப்பின் தலையீடு இருந்திருக்கிறது. எனவே மூன்றாவது தரப்பின் பிரசன்னம் என்பது இங்கே ஒரு கட்டாயமான முன் நிபந்தனையாகும். அதை தமிழ்த் தரப்பு விட்டுக் கொடுக்கக் கூடாது.

அதிலும் இந்தியாவை அந்த மூன்றாவது தரப்புக்குள் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் அதற்குக் கீழ் வரும் முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், இந்தியா ஏற்கனவே இனப்பிரச்சினையில் தலையிட்டிருக்கிறது. ஏற்கனவே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்கியிருக்கிறது. இரண்டாவது காரணம், இது இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்குள் வரும் ஒரு நாடு. மூன்றாவது காரணம், இந்தியாவை மீறி நடக்கும் பேச்சுவார்த்தைகளில் ஒரு கட்டத்தில் இந்தியா குழப்பப்பார்க்கும். தன்னுடைய செல்வாக்கு மண்டலத்துக்குள் வெளிதரப்புகள் உள்நுழைவதை இந்தியா அசௌகரிகமாகவே உணரும். நாலாவது காரணம், இந்தியாவுக்கும் ரணிலுக்கும் இடையே இப்பொழுது காணப்படும் இடைவெளியை தமிழ்த் தரப்பு பயன்படுத்தலாம்.

அண்மை வாரங்களாக அந்த இடைவெளியை குறைக்கும் நடவடிக்கைகளில் ரணில் இறங்கி விட்டார். எனினும் தமிழ்த் தரப்பு இந்தியாவை உள்ளே கொண்டு வரவேண்டும் என்று கேட்பதன்மூலம் இந்தியாவுக்கும் ரணிலுக்கு இடையிலுள்ள இடைவெளியைக் கையாள முயற்சிக்கலாம். கடந்த ஆண்டு இந்தியா கூட்டமைப்பை டெல்லிக்கு வருமாறு கேட்டது. ஆனால் சம்பந்தர் பொருத்தமான, அறிவுப்பூர்வமான காரணங்களின்றி அதை நிராகரித்து விட்டார். இப்பொழுது இலங்கைத் தீவில் தமிழ்த் தரப்பும் இந்தியாவுக்கு நெருக்கமாக இல்லை. சிங்களத் தரப்பும் இந்தியாவுக்கு நெருக்கமாக இல்லை என்பதே உண்மை.

இந்தியா மீண்டும் கூட்டமைப்பை டெல்லிக்கு அழைக்கக்கூடிய வாய்ப்புகள் குறைவு என்றே தெரிகிறது. கூட்டமைப்பாக அழைப்பு விடுத்தால் அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடும். தமிழ்த் தரப்பு தானாக முன்வந்து இந்தியாவை மத்தியஸ்தராக கேட்கலாம். அதன் மூலம் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இடைவெளியை எப்படிக் கையாளலாம் என்று யோசிக்கலாம். எனவே ஒரு மூன்றாவது தரப்பு வேண்டும். அதில் இந்தியா கட்டாயமாக உள்வாங்கப்பட வேண்டும். இது மூன்றாவது.

நாலாவது, பேச்சுவார்த்தைகள் தொடங்கும் பொழுது பேச்சுவார்த்தைக்கான நல்லிணக்கச் சூழலை ஏற்படுத்தும் விதத்தில் உடனடியாக செய்யக்கூடிய விடயங்களை, குறிப்பாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியான ரணில் தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி செய்யக்கூடிய விடயங்களை செய்து முடிக்குமாறு கேட்கலாம். தமிழ்த் தரப்பு சமாதானத்தில் நம்பிக்கை கொள்வதற்கு அது மிக அவசியம்.

இந்த இடத்தில் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பலஸ்தீனர்கள் கூறும் ஒரு விடயத்தை தமிழ்த் தரப்பு தன் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். "நாங்கள் பீசாவை எப்படிப் பங்கிடுவது என்று பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர்களோ அதாவது யூதர்கள், பீசாவை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்". என்று. இது இலங்கைக்கும் பொருந்தும். பேச்சுவார்த்தைகள் நடக்கும் பொழுது நில அபகரிப்பு கண்டிப்பாக நிறுத்தப்பட வேண்டும். நல்லெண்ணச் சமிக்கையாக அபகரிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும், நிவாரணம் கிடைக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாமல் செய்யப்பட வேண்டும்". போன்ற விடயங்களை தமிழ்த் தரப்பு வலியுறுத்தலாம்.

இவ்வாறு பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகளை செய்து கொண்டு ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை தமிழ்த் தரப்பு ஏற்றுக் கொள்ளலாம். பேசிப் பார்க்கலாம். அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றது. அதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, அதை ஒரு பரிசோதனையாக எடுத்துக் கொண்டு, தமிழ்த் தரப்பு அதில் ஈடுபடலாம். அதன் பொருள் அதில் நம்பிக்கைகளை முதலீடு செய்யலாம் என்பதல்ல. மாறாக அரசாங்கத்தை அம்பலப்படுத்துவது. சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை அம்பலப்படுத்துவது. இந்த அடிப்படையில் அதை ஒரு பரிசோதனையாக முன்னெடுக்கலாம். மக்களை நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் பொருத்தமான நிபுணத்துவ ஆலோசனையோடு ஒரு பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும்பொழுது அதில் ஏமாற்றத்துக்கு இடமிருக்காது.

## வீணாவன் கவிக்கணை

உண்மை பேசும் மனதிற்கு,
சஞ்சலம் என்றுமே
இல்லை,
பொய் பேசும் மனதிற்கு,
நிம்மதி என்றுமே
இல்லை,
நேர்மையாக வாழ்பவன்
என்றுமே தலைகுனிய
போவதில்லை,
பொய் புரட்டு சொல்பவன்
தலைநிமிர்ந்து
வாழ்ந்ததாக
சரித்திரமே இல்லை,
உண்மையை என்றுமே பேசிடு
இந்த உலகிற்கே
உதாரணமாய் வாழ்ந்திடு.

## In Scarborough, Canada, in Celebration of Queen Elizabeth II's Platinum Jubilee a Commemorative Pins and the Awards Were Presented to Recipients by Salma Zahid, the Current Member of Parliament for Scaborough Centre.

The Editor in Chief of Canada Uthayan Mr. Logendralingam, Mr. Shankar Nallathamby, a Successful Businessman among Tamil Canadians, and few Tamil Canadians were honoured with Pins and Awards by M.P Salma Zahid.

# ஸ்காபுறோ மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சல்மா சாஹிட் ஏற்பாடு செய்த கனடா அரச வைபவம்




கனடா-ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற அரச வைபவம் ஒன்றை ஸ்காபுறோ மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சல்மா சாஹிட் ஏற்பாடு செய்திருந்தார்.

பல தமிழ் கனடியர்கள் மற்றும் ஏனைய பல இனங்களைச் சேர்ந்த சேவையாளர்கள் ஆகியோருக்கு இங்கிலாந்தின் இரண்டாம் எலிசெபெத் மகாராணியின் 70 ஆண்டு சேவையைக் கொண்டாடும் முகமாக தயாரிக்கப் பெற்ற கௌரவப் பதக்கம் மற்றும் விருது ஆகியன இன்றைய விழாவில் வழங்கப்பெற்றன.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் வர்த்தகப் பிரமுகர் சங்கர் நல்லதம்பி ஆகியோர் அடங்கலாக பல தமிழ்க் கனடியர்கள் மற்றும் பல்லினங்1களைச் சேர்ந்த சேவையாளர்களுக்கு மேற்படி விருதுகள் வழங்கப்பெற்றன.



மேற்படி விருதுகளை வழங்கி அங்கு உரையாற்றிய ஸ்காபுறோ மத்திய தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சல்மா சாஹிட் "கனடிய தேசமானது உலகெங்கும் பல நாடுகளில் பிறந்த இலட்சக் கணக்கானவர்களுக்கு தன் மண்ணில் குடியேறி வாழ்க்கையில் உயர்ந்திட வழிசெய்திட்டதோடு இவ்வாறான உயர் கௌரவங்களை வழங்கி வருவதற்கும் நாம் அனைவரும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்" என்றார்.










செய்தியும் படங்களும்: சங்கர் சிவநாதன் - ரூபம் செய்தித் தளம்

# தமிழ் மொழி மீதான ஆர்வமும் கொண்ட இரு நடிகர்களிடம் தனது நூலைக் கையளித்த கனடா எழுத்தாளர் சு. இராசரத்தினம்



அண்மையில் தமிழ்நாட்டில் இலக்கிய மற்றும் மொழியியல் சுற்றுப்பயணம் செய்தகனடா வாழ் எழுத்தாளர் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் தமிழ் மொழி மீதான ஆர்வமும் ஆற்றலும் கொண்ட இரு நடிகர் பெருமக்களிடம் தனது "படிமுறைத் தமிழ் - மொழியியலும் பண்பாடும்" என்னும் நூலைக் கையளித்தார்.

இங்கு காணப்படும் படங்களில் நடிகர்கள் கமல்ஹாசன் மற்றும் சிவகுமார் ஆகியோரிடம் கனடா வாழ் எழுத்தாளர் சுப்பிரமணியம் இராசரத்தினம் மேற்படி "படிமுறைத் தமிழ் - மொழியியலும் பண்பாடும்" என்னும் நூலை நேரடியாகக் கையளிப்பதைக் காணலாம்.



இந்த நூலின் வெளியீட்டு விழாக்கள் எதிர்வரும் 11ம் திகதி ரொறன்ரோவிலும் 18ம் திகதி மொன்றியால் மாநகரிலும் இடம்பெறும் என அறிக்கப்பெற்றுள்ளது.

# திருமண "போட்டோ ஷூ ட்"டின்போது பாகனை தலைகீழாகத் தூக்கிய யானை



திருமண போட்டோஷூட்டின்போது பாகனை யானை தலைகீழாக தூக்கியதால் பரபரப்பு நிலவியது.

கேரள மாநிலத்தில் புகழ்பெற்ற குருவாயூர் கோவிலில், புதிதாக திருமணம் செய்து கொண்ட கேரள ஜோடி ஒன்று திருமண போட்டோஷூட் நடத்தினர். அங்கு அவர்கள் சற்று வித்தியாசமாக புகைப்படங்களை எடுக்க விரும்பினர். இதற்காக அங்கிருந்த யானை முன் நின்றபடி போட்டோஷூட் நடத்த முடிவு செய்தனர்.

கேமராமேன், புது ஜோடி நடந்து சென்றபடி யானையின் முன்னால் நிற்பதை பதிவு செய்து கொண்டிருந்தார்.

இந்த நிலையில், புதுமணத் தம்பதியின் பின்னால் நின்று கொண்டிருந்த யானை, திடீரெனக் கிளர்ந்தெழுந்து, ஆவேசமாகத் தன் பக்கத்தில் நின்றிருந்த ராதாகிருஷ்ணன் என்ற பாகனை அலேக்காகத் தூக்கிச் சென்றது. அவரை தலைகீழாகத் தூக்கிய யானையிடமிருந்து அந்த பாகன் துள்ளிக்குதித்து காயமின்றித் தப்பினார். அப்போது அவர் உடுத்தியிருந்த வேட்டியை யானை ஆக்ரோஷத்துடன் உருவி வீசியது.

அங்கு வேடிக்கை பார்த்தவர்கள், யானையின் ஆவேசம் கண்டு அலறியடித்து ஓடினர். இதனிடையே, யானையின் மேல் இன்னொரு பாகன் அமர்ந்திருந்தார். அவர் யானையை தட்டிக்கொடுத்து சாந்தப்படுத்தினார். யானை அமைதியடைந்ததையடுத்து கோவில் வளாகம் அருகே யானையை கயிற்றால் கட்டி வைத்தனர்.



கடந்த மாதம் நடந்த இச்சம்பவம் கேமராவில் பதிவாகியுள்ளது. இந்த வீடியோவை இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு தங்களது திகில் அனுபவத்தை அந்த தம்பதியினர் பகிர்ந்துள்ளனர். இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

மணமகன் நிகில் அந்த வீடியோவில் பேசும்போது, "நாங்கள் போட்டோவுக்கு போஸ் கொடுத்தோம். திடீரென அனைவரும் அலறியடித்து ஓடினர். அவள் (மணமகள்) என் கையைப் பிடித்துக்கொண்டு ஓடினாள். யானைகளை நாம் காயப்படுத்தினால் மட்டுமே அவை எதிர்வினையாற்றும்" என்றார்.

உலக செய்திகள்
World News

# மனித மூளைக்குள் "சிப்" பொருத்தி பரிசோதிக்க திட்டமிடுகிறார், எலான் மஸ்க்



மனித மூளைக்குள் சிப் ஒன்றை பொருத்தி மனிதர்கள் மத்தியில் சோதனை செய்ய உள்ளதாக, டுவிட்டர் உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மூளைக்குள் சிப்பை பொருத்தி, அதை கணினியுடன் இணைத்து, அதன் மூலம் கணினியுடன் நேரடி உரையாடலை ஏற்படுத்தும் வகையில் இந்த பரிசோதனையை விரைவில் மேற்கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அந்த சிப்களில் ஒன்றை தானே செலுத்திக்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் எலான் மஸ்க் கூறியிருக்கிறார்.

இந்த சோதனை தற்போது குரங்குகளிடம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் மனிதர்கள் மத்தியில் சோதனை செய்யப்பட உள்ளது. அதன்மூலம், மனதில் நினைப்பதை கணினி மூலம் செயல்படுத்த முடியும். இந்த பரிசோதனை முயற்சிக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, தங்களை அனுமதிக்குமாறு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக மஸ்க் கூறினார்.

எலான் மஸ்கின் ஸ்டார்ட் அப் நிறுவனமான நியூராலிங்க் இதனை மேற்கொள்கிறது. இன்னும் 6 மாதங்களில் மனிதர்களிடம் நியூராலிங்க் சோதனை தொடங்கும். மனிதர்கள் மத்தியில் இந்த சோதனையை மேற்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம் என்று எலான் மஸ்க் தெரிவித்தார்.

இந்த சிப் ஒரு சிறிய நாணயத்தின் அளவில் இருக்கிறது. நியூராலிங்க் 2021ஆம் ஆண்டில் ஒரு வீடியோவை வெளியிட்டது, அதில் ஒரு குரங்கு தனது மூளையில் பொருத்திய சிப்பை பயன்படுத்தி வீடியோ கேம் விளையாடுவதைக் காண முடிந்தது. இந்த சிப் மூலம் மனிதர்கள் இழந்த பார்வையை பெற முடியும். முதுகுத் தண்டு எலும்பு முறிவு அல்லது பக்கவாதத்தால் முற்றிலுமாக ஊனமுற்றவர்களை மறுவாழ்வு செய்வதிலும் நியூராலிங்கின் தொழில்நுட்பம் பயனுள்ளதாக இருக்கும். மூளையில் எந்த நியூரான் செயலிழந்ததோ அதனை இந்த சிப் மூலம் தூண்டிவிட்டு வேலை செய்ய வைக்கமுடியும் என்று கூறுகின்றனர்.

நியூராலிங்க் நிறுவனத்தின் இந்த சோதனை வெற்றியடைந்தால், சிப் உதவியுடன் கணினியைக் கட்டுப்படுத்த முடியும். சிப் பொருத்தப்பட்டவரின் மனதில் நினைக்கும் வேலையை கணினி செய்யும் என்று நம்பப்படுகிறது.



# அப்பிள் நிறுவன ஐபோன்கள் உற்பத்தி சீனாவில் இருந்து இந்தியாவுக்கு மாறுகிறது

சீனாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக அங்கு கடுமையான கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. இதனால் அதிருப்தியடைந்த மக்கள் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைநகர் பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களில் மக்கள் தொடர்ச்சியாக வீதிகளில் இறங்கி போராடினர். பல இடங்களில் போலீசாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

வன்முறை எதிர்ப்புகளை அடுத்து, வளர்ந்து வரும் புவிசார் அரசியல் பதற்றம் மற்றும் ஊரடங்கு கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், ஐபோன் தயாரிப்பு நிறுவனமான ஆப்பிள், சீனாவில் இருந்து தனது தயாரிப்பை வேறு நாட்டுக்கு மாற்றுவது குறித்து ஆலோசித்து வருகிறது.


மாபெரும் தொழில்நுட்ப நிறுவனமான ஆப்பிள், சீனாவில் அதன் உற்பத்தியை நிறுத்த விரும்புகிறது. மேலும் கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக ஐபோன்கள் உற்பத்தி குறைந்து விட்டதாகவும், ஏற்றுமதி பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது, நிறுவனம் தனது தயாரிப்புகளில் 5 சதவீதத்தை சீனாவுக்கு வெளியே உற்பத்தி செய்கிறது. 2025 ஆம் ஆண்டுக்குள், ஐபேட், மேக், ஆப்பிள் வாட்ச், ஏர்போட்ஸ் உள்ளிட்ட மொத்த ஆப்பிள் தயாரிப்புகளில் 25 சதவீதத்தை சீனாவிற்கு வெளியே பிற ஆசிய நாடுகளில் உற்பத்தியை செய்ய திட்டமிட்டுள்ளது. ஆப்பிள் தனது பல ஒப்பந்த உற்பத்தியாளர்களை சீனாவிலிருந்து உற்பத்தியை நகர்த்துமாறு அறிவுறுத்தியுள்ளது. இந்தியா மற்றும் வியட்நாமில் தனது வணிகத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்து ஆய்வு செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கனடிய செய்திகள்
Canadian News

# Ontario's Minister Stephen Lecce able to reach a tentative agreement following the support of a large number of CUPE members

# கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கத்தின் அதிகளவு உறுப்பினர்களின் ஆதரவைத் தொடர்ந்து தற்காலிக உடன்படிக்கையை எட்ட முடிந்தது மகிழ்ச்சி என்கிறார் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் மந்திரி ஸ்டீபன் லெச்சே



"பேச்சுவார்த்தைகள் தொடங்கியதில் இருந்து, எமது மாணவர்கள் வகுப்பில் இருந்து கற்க வேண்டும் என்ற நம்பிக்கையால் நாங்கள் வழிநடத்தப்படுகிறோம். எமது மாணவர்கள் வகுப்பறைகளில் வைத்திருக்கும் மற்றும் கழகங்கள் மற்றும் மேலதிக பாடத்திட்டங்கள் போன்ற கற்றல் அனுபவத்தைப் பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்கத்தின் பெருமளவு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடிந்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்".

இவ்வாறு ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள சுருக்கமான அறிக்கையில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

---------------------------------

"Since negotiations began, we have been guided by the belief that kids should be in class. We are so pleased we've been able to reach an agreement that has been overwhelmingly ratified by the members that keeps kids in classrooms and preserves the learning experience, like clubs and extra curriculars."



# தமிழகத்துக் கவிஞர் "அன்புடன் புகாரி"யின் இரண்டு கவிதை நூல்கள் ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் வெளியிடப்பெற்றன





கனடா வாழ் தமிழகத்துக் கவிஞர் "அன்புடன் புகாரி"யின் இரண்டு கவிதை நூல்கள் ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் வெளியிடப்பெற்றன.

கனடா வாழ் தமிழகத்துக் கவிஞர் "அன்புடன் புகாரி" அவர்களின் "நயாகரா சொல்லும் சாரல் வாழ்த்து" "அன்புடன் நயாகரா" ஆகிய கவிதைத் தொகுதிகள் வெளியீட்டு விழா கடந்த 3ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஸ்காபுறோ நகர சபை சபா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா வாழ் தமிழகத் தமிழர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பல்வேறு துறைகள் சார்ந்த அன்பர்கள் கலந்து கொண்ட நூலின் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

"சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் அவர்கள் அறிமுக உரையாற்றினார். அங்கு எடுக்கப்பெற்ற சில புகைப்படங்கள் இங்கே காணப்படுகின்றன.





# "நாஜிகளும்" "ஹிட்லரும்" கைகோர்த்து பயணிக்கும் நாடு



**வி.தேவராஜ்**
மூத்த
ஊடகவியலாளர்

• **நா**ட்டையும் மக்களையும் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

இலங்கை நாட்டையும் மக்களையும் படைத்த கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்ற நிலையை தென்னிலங்கை அரசியல்வாதிகள் தோற்றுவித்துவிட்டனர்.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது.

சாதாரண மக்களை இந்த பொருளாதார நெருக்கடி சிறு நீரகங்களைவிற்று சீவியம் நடத்தும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

மறுபுறம் போதைவஸ்து மாபியாக்கள் நாட்டையே போதைக்குள் தள்ளி தமது பைகளை நிரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இன்னொருபறம் மத்திய கிழக்கில் இலங்கைப் பெண்கள் நவீன அடிமைத்தனத்தில் சிக்கி சீரழிந்து கொண்டிருக்கின்றனர்.

1. ராஜபக்ஷ குடும்பத்தினர் கொள்ளையிட்ட பணத்தை நாட்டுக்கே திருப்பி வழங்க வேண்டும்.
2. ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும்.
3. ஊழல் மோசடி இல்லாத அரசும் அரசியல் கலாசாரமும் உருவாக்கப்பட வேண்டும்.
4. "அரசியல் சிஸ்டத்தில்" மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என இளைஞர்களும் யுவதிகளும் வீதியில் இறங்கினர்.

இந்தக் கோஷங்களுடன் அணி திரண்ட இளைஞர் யுவதிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வேட்டையாடப்படுகின்றனர்.

• அரசியல் எழுச்சிகள் சுற்றுலாவை பாதிக்கின்றன

அரசியல் எழுச்சிகள் சுற்றுலாவை மோசமாக பாதிக்கின்றன என்ற காரணத்தைக் காட்டி பொதுமக்களின் எதிர்ப்பைக் கட்டுப்படுத்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்களைப் பயன்படுத்துவதை அரசாங்கம் நியாயப்படுத்துகின்றது.

அப்படியானால் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன (SLPP) மற்றும் ஐதேக (UNP) என்பன ஏன் ஆட்சி மாற்றத்திற்காக கடந்தகாலங்களில் வீதியில் இறங்கி போராட்டங்களை மேற்கொண்டார்கள் என்பதை விளக்குவார்களா? நியாயப்படுத்துவார்களா?

மகிந்த ராஜபக்ச நிர்வாகத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி பெரும் எண்ணிக்கையிலான போராட்டங்களை நடத்தியது.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன நடத்திய (SLPP) வெகுஜன எதிர்ப்பு போராட்டங்களின் மூலம் நல்லாட்சி அரசாங்கத்தை சீர்குலைத்தது.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்தது. விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட உடனேயே. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டக்காரர்களின் நலன்களைக் கவனிக்க ஒரு குழுவை நியமித்தார்!

ஆனால் தற்போது ஐ.தே.கவும் மொட்டுக் கட்சியினரும் (SLPP – UNP) இணைந்து போராட்டக்காரர்களை நசுக்குகின்றனர்.

அமைதியான போராட்டங்களை விட, மின்வெட்டு, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்கள் போன்றவை சுற்றுலாவை அதிகம் பாதிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளின் வாக்குமூலமே இதற்குச் சான்று.

இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் தனது பிரஜைகளுக்கு குடிக்க மருந்து இல்லை! இலங்கைக்கு செல்வதாக இருந்தால் உங்களுக்கான மருந்தை எடுத்துச் செல்லுங்கள்! என தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

• "நாஜிகள்" மிரட்டல்

நடைமுறையில் உள்ள தண்டனையில்லா கலாசாரம். இங்குள்ள "நாஜிக்கள்" தங்கள் அரசியல் எதிரிகளை மிரட்டுவதற்காக வன்முறையை கட்டவிழ்த்துவிடத் துணிந்துள்ளதாகத் தெரிகிறதுஎன்று ஆங்கில் நாளிதல் ஒன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

• தண்டனை திருடர்களுக்கல்ல மக்களுக்கே!

வெளி நாடுகளில் திருடர்கள் தண்டனைக்கு பயந்து வாழ்கிறார்கள் ஆனால் இலங்கையில் கொள்ளையடித்தால் அல்லது திருடினால் பயந்து வாழ வேண்டியதில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. அதேவேளையில் ஏதும் தம்மால் நடைபெறவில்லை என்பதுபோல் நாட்டை நிமிர்த்த மக்கள் தியாகங்களைச் செய்ய முன்வர வேண்டுமென சாத்தான்களாக வேதம் ஓதுகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் தண்டனையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

• மக்களை தற்கொலைக்குத் தள்ளும் வரி அதிகரிப்பு

பெருந்தொகையான பொதுச் செல்வங்களைத் திருடி நாட்டையே திவாலாக்கிவிட்டு பொருளாதாரக் குற்றங்களைச் செய்தவர்கள் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்கள் அமைதியாக இருக்க பிறர் செய்த பாவங்களுக்குப் பாரிய அளவில் பணம் கொடுக்க வேண்டிய நிலையில் மக்களின் மடியில் இருந்து இழப்பை மீட்டெடுக்க இந்தச் சக்திகள் துடிக்கிறார்கள். கட்டணங்கள் மற்றும் வரிகளில் அதிகரிப்பு. உத்தேச வரி அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால் பலரை தற்கொலைக்குத் தள்ளும் நிலையே நாட்டில் உருவாகியுள்ளது.

• அரசியல் ஸ்திரத்தன்மை

அரசியல் ஸ்திரத்தன்மை என்பது பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஒரு முன்நிபந்தனை என்பது உண்மையே.

ஆனால் பொது மக்களின் எதிர்ப்புகளை அடக்குவதன் மூலம் அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்கிவிட முடியாது.

அதேபோன்று, மக்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகி நிவாரணம் கோரி நிற்கும்போது அரசியல் ஸ்திரமின்மையை உருவாக்குவது என்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது; எனவே அரசாங்கம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதில் முழு வீச்சில் இறங்க வேண்டும்.

ஆனால் துரதிஷ்டவசமாக ராஜபக்ச குடும்பம் ஐ.தே.கவும் மொட்டுக் கட்சியினரதும் (SLLP – UNP) மற்றும் அவர்களது கூட்டாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மும்முரமாக உள்ளனர்.

தன்னை ஹிட்லர் என்று அழைத்துக் கொள்ளும் ஜனாதிபதி விக்கிரமசிங்க அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களை "பாசிஸ்டுகள்" என்று கண்டித்துள்ளார்!

மொத்தத்தில் "சிஸ்டம் சேன்ஜ்" வேண்டுமென போராட்டக் களத்தில் இறங்கிய தாம் போராட வீதியில் இறங்க முடியாதுள்ளதுடன் மிக மோசமாகப் பழி வாங்கப்படுகின்றோம் என வெளிப்படையாக பேசத் தொடங்கியுள்ளனர்.

Email : vathevaraj@gmail.com

இந்தியா செய்திகள்
India News

# தமிழக கோவில்கள் அனைத்திலும் செல்போன் பயன்படுத்த தடை

தமிழக அரசின் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள் அனைத்திலும் செல்போன் பயன்பாட்டிற்கு தடை விதித்து மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்போன்கள் கொண்டு போக கடந்த சில ஆண்டுககளாக அனுமதி இல்லை. செல்போன்களை டிக்கெட் வாங்கிக் கொண்டு லாக்கர்களில் வைத்துவிட வேண்டும்.

சாமி கும்பிட்டு விட்டு திரும்பி வரும்போது டிக்கெட்டை கொடுத்து விட்டு செல்போன்களை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதுபோல் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் முருகன் கோவிலிலும் செல்போன்கள் கொண்டு போக தடைவிதிக்கும்படி மதுரை உயர்நீதிமன்றம் சமீபத்தில் ஆணையிட்டது.

இந்தநிலையில், தமிழகத்தின் கோவில்கள் அனைத்திலும் செல்போன் பயன்பாட்டிற்கு தடை விதித்து மதுரை ஐகோர்ட்டு இன்று (டிச 2) உத்தரவிட்டுள்ளது. கோவிலின் புனிதம் மற்றும் தூய்மையைக்காக்கும் விதமாக செல்போன் தடையை நடைமுறைப்படுத்த இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு மதுரை ஐகோர்ட்டு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.





# நீரில் மூழ்காமல் ஊர்ந்து செல்லும் பல்லி - வைரலாகும் வீடியோ

தண்ணீரில் மூழ்காமல் ஊர்ந்து செல்லும் பல்லி பார்ப்பவர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இயற்கை எப்போதுமே ஆச்சரியமும் அதிசயமும் நிறைந்தது. சூரியனையும் நட்சத்திரங்களையும் பயன்படுத்தி புலம்பெயரும் பறவைகள் முதல் அகச்சிவப்பு கதிர்வீச்சைக் கண்டறியும் பாம்புகள் வரை, மேம்பட்ட அறிவியலைப் பயன்படுத்தி உயிர்வாழும் இயற்கை உயிரினங்கள் எப்போதுமே நம்முடைய மனதைக் கவரும் வகையில் உள்ளன.


அந்த வகையில் தற்போது இணையத்தில் ஒரு உயிரினத்தின் செயல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ஊர்வன இனத்தைச் சேர்ந்த "இயேசு பல்லி" அல்லது பசிலிஸ்க் பல்லி என்று அழைக்கப்படும் பல்லி ஒன்று தண்ணீரில் ஊர்ந்து செல்லும் வீடியோ பார்ப்பவர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இந்த வீடியோவை ஐஎப்எஸ் அதிகாரி, சுசாந்தா நந்தா என்பவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்த வீடியோவில் நீர்நிலையின் நடுவில் உள்ள கிளை ஒன்றில் உள்ள பசிலிஸ்க் பல்லி, தண்ணீரில் குதிக்கிறது. தொடர்ந்து வேகமாக தண்ணீரில் ஊர்ந்த அந்த பல்லி, கரையை அடையும் வரை மூழ்காமல் செல்கிறது.

இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. இதுகுறித்து விளக்கமளித்துள்ள சுசாந்தா, நீர் மூலக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டிருக்கும் போது உருவாகும் மேற்பரப்பு இழுவிசையின் காரணமாக சிறிய விலங்குகள் தண்ணீரில் மூழ்காமல் ஊர்ந்து செல்ல முடிகிறது என்று கூறியுள்ளார்.

ஆனாலும் கோழி காலால் முட்டையை உதைத்து பந்து விளையாடும் வீடியோ போல் இதுவும் கிராபிக்ஸ் செய்யும் மாயமோ என்று பலரும் பின்னூட்டமிட்டு வருகின்றனர்.

# இந்திய கடற்படை அக்னிவீரர்களில் 341 பேர் பெண் மாலுமிகள்



இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்ட 3 ஆயிரம் அக்னிவீரர்களில் 341 பெண் மாலுமிகள் உள்ளனர் என இந்திய கடற்படை தலைமை தளபதி கூறினார்.



இந்திய கடற்படையின் தலைமை தளபதி ஹரி குமார் செய்தியாளர்களிடம் பேசினார். அவர் கூறியதாவது: நான் முன்பே கூறியதுபோன்று இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்ட முதல் தொகுதியை சேர்ந்த 3 ஆயிரம் அக்னிவீரர்களில் 341 பேர் பெண்கள் ஆவர். இந்த 341 பெண்கள் கப்பல் மாலுமிகளாக செயல்படுவார்கள். ஆண்கள் பெறும் அதே பயிற்சி முறைகளை அவர்களும் பெறுவார்கள். கப்பல்கள், விமான தளங்கள், விமானங்களில் அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள். ஒரு மாலுமிக்கு அளிக்கக் கூடிய அதே பயிற்சி முறைகள் அவர்களுக்கும் வழங்கப்படும். பயிற்சி முறையில் எந்தவிதவேற்றுமையும் இருக்காது. ஒரு தனிநபரின் திறமையை மட்டுமே நாங்கள் பார்க்கிறோம்.

இதுதவிர, பாலின சமத்துவ கடற்படையாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் பார்க்கிறோம்.

அடுத்த ஆண்டில் இருந்து, அனைத்து பிரிவுகளிலும் பெண் அதிகாரிகளை படையில் சேர்ப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம். இதுவரை 7 முதல் 8 பிரிவுகளில் மட்டுமே அவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு தலைமை தளபதி கூறினார்.


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160



Varnam School of Music
humbly invites you to the
VEENA ARANGETRAM
of
Mathangee Puvanalingam
Student of
SANGEETHA MIRUDANGA KALAVITHAHAR
ISAIKALAIMANI
Sri Varna Rameswaran
Saturday Dec 10, 2022; 4:00pm
Chinese Cultural Centre (5183 Sheppard Ave E.)
Refreshments will be provided before concert


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லரை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
tasty தமிழா
TASTY தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)


Happy
Holidays
இனிய விடுமுறைகால
நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham — Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய அரசு வழங்கவுள்ள புதிய பல் மருத்துவ கொடுப்பனவு பற்றி அறிந்து கொள்ளுங்கள்



## நீங்கள் உடனடியாக விண்ணப்பித்து அதன் பலனை அனுபவியுங்கள்! ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற விபரங்கள்

அன்புடையீர்,

கனடாவிலும், உலகெங்கிலும், சிறுவர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும், ஆனால் தடுக்கப்படக் கூடிய, நீண்டகால நோய் பற்சிதைவு என்பது உங்களுக்குத் தெரியுமா? 2010 ஆம் ஆண்டில், கனடாவில் 6 முதல் 11 வயது வரையான சிறுவர்களில் 57 சதவீதமானோருக்கு ஏற்கனவே பற்சூத்தை ஏற்பட்டிருந்ததெனத் தெரிவிக்கப்பட்டது. வாய் நோய்கள் இளம்பராயத்திலேயே, முக்கியமாக பள்ளிக்கூடம் செல்வதற்கு முன்பே அடிக்கடி ஏற்படுவதால், வாய் நலனைப் பேணும் நல்ல பழக்கவழக்கங்களை இயலுமான அளவு முற்கூட்டியே உருவாக்குவது முக்கியமானது.

இதற்காகவே, செலவினங்களைச் சமாளிக்க உதவும் எமது கனடிய அரசின் திட்டத்தின் ஒரு அங்கமாகக் குடும்பங்கள் பல் மருத்துவ செலவைச் சமாளிக்க உதவும் வகையில் எமது அரசு தற்காலிக **பல் மருத்துவ கொடுப்பனவு** ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், குடும்பங்கள் அவர்களது சிறு பிள்ளைகளுக்கு அடிப்படைப் பற்சிகிச்சையை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றுத.

தனியார் பல் மருத்துவ காப்புறுதி இல்லாத, 90,000 டொலரிலும் குறைந்த சரிசெய்த நிகர குடும்ப வருமானம் (adjusted net income) கொண்ட, மற்றும் 12 வயதிலும் குறைந்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு **கனடிய அரசின் பல் மருத்துவ கொடுப்பனவு தற்போது கிடைக்க** வாய்ப்பு இருக்கிறது.

இந்தத் திட்டத்தில், பல் மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கென ஒரு பிள்ளைக்கு 1,300 டொலர் வரையான பணம் (வருடமொன்றுக்கு 650 டொலர் வரை, இரண்டு வருடங்களுக்கு), நேரடியாகவும், முற்கூட்டியேயும் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்:



- சரிசெய்த நிகர குடும்ப வருமானம் 70,000 டொலரிலும் குறைவாக இருந்தால், தகுதியுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும், வருடமொன்றுக்கு 650 டொலர் வழங்கப்படும்.
- சரிசெய்த நிகர குடும்ப வருமானம் 70,000 டொலரிற்கும் 79,999 டொலரிற்கும் இடைப்பட்டதாக இருந்தால், தகுதியுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும், வருடமொன்றுக்கு 390 டொலர் வழங்கப்படும்.
- சரிசெய்த நிகர குடும்ப வருமானம் 80,000 டொலரிற்கும் 89,999 டொலரிற்கும் இடைப்பட்டதாக இருந்தால், தகுதியுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும், வருடமொன்றுக்கு 260 டொலர் வழங்கப்படும்.

தேசிய பல் மருத்துவத் திட்டம் ஒன்றை உருவாக்கும் நடவடிக்கை தொடரும் வேளையில், இந்தக் கொடுப்பனவு 2024 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும்.

கனடா வருமான வரி முகாமை, அத்தியாவசிய கொடுப்பனவுகளைக் கனேடியர்களுக்கு வழங்கிய அனுபவத்தையும், எது சிறந்த நடைமுறையென்ற பட்டறிவையும் பயன்படுத்திக் கனேடிய அரசின் சார்பாக இந்தக் கொடுப்பனவை வழங்கும் பணியைச் செய்கிறது. ஒக்ரோபர் 1, 2022 இற்கும் ஜூன் 30, 2023 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தகுதியுள்ள பிள்ளைகள் பெற்ற/பெறும் பற் சிகிச்சைக்காக நீங்கள் இப்போது இந்தக் கொடுப்பனவைப் பெற விண்ணப்பிக்கலாம். தகுதியுள்ள குடும்பங்கள் விரைவாகவும், இலகுவாகவும், பாதுகாப்பாகவும் கனடா வருமான வரி முகாமையின் My Account இல் (ESDC யின் My Service Canada Account ஊடாகவும் இந்தக் கணக்கை அடையலாம்) விண்ணப்பிக்கலாம், அல்லது இதற்கென்ற தனியான 1-800-715-8836 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து விண்ணப்பிக்கலாம். நீங்கள் இணையத்தின் மூலம் விண்ணப்பித்து, நேரடி வைப்பு முறையைத் தெரிவு செய்தால், உங்களுக்கான கொடுப்பனவு ஐந்து வேலை நாட்களுக்குள் கிடைக்கும். கனடா பல் மருத்துவ கொடுப்பனவைப் பெறுவதற்கு நீங்கள் 2021 ஆம் ஆண்டுக்கான உங்களது வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பித்திருக்கவேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள். உங்களுக்கான கொடுப்பனவு விரைவில் கிடைப்பதை உறுதி செய்வதற்கு உங்களது முகவரி, திருமண நிலை, நேரடி வைப்புத் தொடர்பான தகவல்கள், பிள்ளைகளின் விபரங்கள் அனைத்தும் கனடா வருமான வரி முகாமையின் My Account ரில் சரியாக இருப்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

இந்தக் கொடுப்பனவு கனடாவில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான பிள்ளைகளுக்கு உதவியாக இருக்குமெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே உங்களது அன்புக்குரியவர்கள் இதற்குத் தகுதி பெற்றுள்ளார்களாவெனக் கண்டறிந்து, ஆம் என்றால் நீங்கள் உடனடியாக விண்ணப்பித்து அதன் பலனை அனுபவியுங்கள்!

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# இலங்கை மக்களிற்கு பசளை வழங்கி உதவிய அமெரிக்கா




யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள 193,000 விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக அமெரிக்கா 9,300 தொன் யூரியா உரத்தை விவசாய அமைச்சிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளது.

USAID நிறுவனத்தின் நிதியுதவியுடன் FAO (Food and Agriculture Organization) ஆல் வழங்கப்பட்டுள்ள இந்த உரமானது, முதற்கட்ட உதவி என்றும் அடுத்துவரும் மாதங்களில் நாடு முழுவதும் உள்ள ஒரு மில்லியன் விவசாயிகளுக்கு விநியோகிக்கத் தேவையான யூரியா உரம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

"அமெரிக்க மக்களால் வழங்கப்படும் இந்த உரமானது, இலங்கை விவசாயிகளுக்கு எதிர்வரும் மாதங்களில் எண்ணற்ற இலங்கை குடும்பங்களுக்கு உணவளிக்க உதவும்" என இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங், கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற கையளிப்பு நிகழ்வில் தெரிவித்தார்.

"உரம் மாத்திரம் இலங்கையின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யாது என்பதை நான் அறிவேன், ஆனால் இந்தச் சவாலான நேரத்தில் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் ஆதரவளிக்கும் அமெரிக்காவின் மிகப் பெரிய முதலீட்டின் ஒரு அம்சமே இந்த உதவியாகும். மொத்தத்தில், கடந்த ஆண்டில் சிறு வணிகங்களுக்கான புதிய உதவி மற்றும் கூடுதல் கடன்களில் $240 மில்லியனுக்கும் அதிகமான தொகையை அறிவித்துள்ளோம் - நாங்கள் அதைத் தொடர்வோம். இன்றைய உரம் போன்ற உதவிகள், இலங்கை மக்களுக்கு அமெரிக்காவின் நல்லெண்ணத்தையும் உண்மையான அர்ப்பணிப்பையும் காட்டுகின்றன" என்று அவர் மேலும் கூறினார்.



நெல் உற்பத்தியை அதிகரிக்கவும் உணவு நெருக்கடியைத் தவிர்க்கவும் அத்தியாவசிய உரங்களை வாங்குவதற்கு USAID மூலம் அமெரிக்கா $46 மில்லியன் நிதியை வழங்கியுள்ளது - அதில் ஒரு பகுதி இன்று வந்துள்ளது. இந்த நிதியுதவியானது கடந்த இரண்டு விவசாய பருவங்களில் குறைந்த விளைச்சல் மற்றும் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு பண உதவியை வழங்கும். USAID மற்றும் அதன் கூட்டாளிகள் தங்கள் வேலையை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் தேவையான வழிமுறைகளை வைத்துள்ளனர், உதவி அதன் நோக்கம் பெறுபவர்களைச் சென்றடைவதையும், பாதிக்கப்படக்கூடிய விவசாய குடும்பங்களுக்கு பலன்களை வழங்குவதையும் உறுதி செய்கிறது.

FAO Sri Lanka, உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும், உரப் பாவனைத் திறன் மற்றும் சுற்றுச்சூழலின் நிலையான பாவனைக்கும் தேவையான தொழில்நுட்பம் மற்றும் திறனைக் கட்டியெழுப்புவதன் மூலம் விவசாயத் துறையை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளது என அமெரிக்கா தூதர் கூறினார்.

மேலும் விவசாயிகளுக்கு அத்தியாவசிய உரங்கள் இலவசமாக கிடைப்பதை உறுதி செய்வதில் அமெரிக்க அரசாங்கம் மற்றும் FAO அவர்களின் ஆதரவிற்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்" என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்கிறது!

## கூட்டாட்சி பற்றிப் பேசக் கட்சி தயாராக இருப்பாதாக நா.உறுப்பினர் அறிவிப்பு!

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இலங்கையின் அரசியலமைப்பின் 13 வது திருத்தமானது 1987 ஆம் ஆண்டின் சர்ச்சைக்குரிய இந்திய - இலங்கை உடன்பாட்டில் இருந்து மோசமடைந்து வரும் இன மோதலுக்கு ஒரு உத்தேசிக்கப்பட்ட தீர்வாக வெளிப்பட்டது. இந்தத் திருத்தத்தை அடுத்து மாகாண சபைகள் வந்தன. ஆனால் முதலில் நினைத்தபடி மாகாணங்களுக்குக் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் இன்னும் பகிர்ந்தளிக்கப் படவில்லை. சிங்கள மற்றும் தமிழ்த் தேசியவாதிகள் இரு சாராரும் 13வது திருத்தத்தை எதிர்த்துள்ளனர். சிங்களவர் அதிகாரப் பகிர்வு அதிகம் என எதிர்த்தார்கள். தமிழர்கள் அதிகாரப் பகிர்வு போதுமானதாக இல்லை எனக் கூறி எதிர்த்தார்கள்.

"இந்தத் தீர்மானனத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தும் விக்கிரமசிங்கவுக்குத் தெரியும்" என சுமந்திரன் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ச நியமித்த அனைத்து கட்சிப் பிரதிநிதிக் குழுவையும் **(APRC)** அவர் (விக்கிரமசிங்க) ஒப்புக் கொண்டார்.

"நாங்கள் அனைத்துக் கட்சிக் குழுவில் பங்கேற்கவில்லை என்றாலும், இது ஒரு நல்ல அறிக்கை. ஓகஸ்ட் 2000 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரத்துங்கா ஒரு அரசியலமைப்பு மசோதாவை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்தபோது, அரசாங்கத்தில் இன்று முன் வரிசையில் இருக்கும் பல உறுப்பினர்கள் அமைச்சரவையின் உறுப்பினர்களாக இருந்தனர். ஜனாதிபதி விக்ரமசிங்க அவர்களின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி பதவியைப் பொறுத்தவரை ஒரு இடைக்கால ஏற்பாட்டின் காரணமாக (நாடாளுமன்றத்தின் ஆயுளை இரண்டு ஆண்டுகள் நீடிக்கும்) மட்டுமே அதை எதிர்த்தது. அதில் காணப்பட்ட அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் காரணமாக அல்ல" என்று சுமந்திரன் கூறினார்.

குமாரதுங்கா அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தபோது ஐக்கிய தேசியக் கட்சி அதனை (சட்ட மூலத்தை) அறிபழியான முறையில் எரித்தது. மற்றவர்கள் உடன்படவில்லை என்றாலும், இலங்கையின் நீடித்த அமைதிக்கான பாதையில் அந்த நிகழ்வை ஒரு தவறான எண்ணமாக ஆய்வாளர்கள் மறுபரிசீலனை செய்துள்ளனர். ஒருமித்த கருத்து ஏற்கனவே உள்ளது என்றும் அதையிட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சுமந்திரன் கூறினார்.

"அதுதான் இப்போது ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்று சுமந்திரன் கூறினார். 75 வது சுதந்திர நாள் கொண்டாட்டத்திற்கு முன்னதாக ஒரு நிலையான தீர்மானத்திற்கான ஜனாதிபதியின் அழைப்பு, ஒரு சிறந்த இலட்சியமாகும், ஆனால் அதற்கு அதிக நேரம் இல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் எச்சரித்தார்.

"எனவே நீங்கள் அறிவித்திருக்கும் குறிக்கோளை அடைய நாங்கள் உங்களுடன் ஆக்கபூர்வமாகப் பணியாற்ற ஆயத்தமாக இருக்கிறோம். இந்த நாட்டில் வாழும் எமது மக்களினது (தமிழர்கள்) நியாயமான மற்றும் சட்டபூர்வமான அபிலாசைகளை, ஏன் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் நியாயமான மற்றும் சட்டபூர்வமான அபிலாசைகளை, அடைவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்" என்று அவர் கூறினார். சுமந்திரன் தனது உரையில், தனது கட்சி பெரும்பான்மை மக்களுக்குத் தெரியாமல் எதையும் செய்ய விரும்பவில்லை என வற்புறுத்தினார்.

"எல்லோரும் பாதுகாப்பாக இருப்பதாக உணர வேண்டும். எங்களின் ஆசையும் அதுதான். இந்த நாட்டின் பெரும்பான்மையினர் (சிங்களவர்) அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்."

" உலக மக்கள்தொகையில் 40 விழுக்காட்டிலும் அதிகமானோர் கூட்டாட்சி நாடுகளில் வாழ்கிறார்கள்" என்று கூறினார். (கூட்டாட்சி வடிவிலான 25 நாடுகள் உள்ளன). "அவைதான் உலகின் வலிமையான நாடுகள்" என்றும் சுமந்திரன் கூறினார். "அரைக் கூட்டாட்சி முறைமை கொண்ட நாடுகளும் உண்டு. அவை சில சமயங்களில் ஒற்றையாட்சி நாடுகள் என்று தங்களை அழைக்கின்றன. எடுத்துக்காட்டு பிரித்தானியா. ஆனால் பிரித்தானியாவைப் போன்ற நாட்டில், அதிகாரப் பகிர்வின் அளவு ஒரு கூட்டாட்சி அரசாங்கத்துக்கான வரைவிலக்கணத்தை விட மிக அதிகம்.

"உலகில் எங்கும் காணப்படாத ஒன்றை நாங்கள் கேட்கவில்லை. நியாயமான மற்றும் உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ள ஒன்றை நாங்கள் கேட்கிறோம். அதன் மூலம் எமது மக்கள் அனைவரும் இந்நாட்டில் கண்ணியத்துடனும் தன்மானத்துடனும் வாழ்வார்கள் என்பதை அது உறுதி செய்யும். பெரும்பான்மையான மக்கள் அதைப் புரிந்துகொண்டு அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மை இனம். அதை யாரும் மாற்ற முடியாது. பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்கா தான் 1926 இல் இந்த நாட்டிற்கு கூட்டாட்சி என்ற கோட்பாட்டை அறிமுகப்படுத்தினார், தமிழ்த் தலைவர்கள் அல்ல," என அவர் கூறினார். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டு தனித்தனி சந்தர்ப்பங்களில் கண்டிய தலைவர்கள் ஒரு கூட்டாட்சி அரசமுறைமையைக் கேட்டதாக சுமந்திரான் நினைவு கூர்ந்தார்.

"எனவே இது சிங்கள மக்களுக்குக் கெட்டதாக இருக்க முடியாது, சிங்கள மக்கள்தான் அதைக் கேட்டனர்" என்று அவர் குறிப்பிட்டார், காலப்போக்கில் தவறான செய்திகள் நாட்டுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

கூட்டாட்சி என்பது பல ஆண்டுகளாக இலங்கையில் மிகவும் சர்ச்சைக்குரிய மற்றும் அரசியல் எரியக்கூடிய யோசனையாக இருந்து வருகிறது. பல தேசியவாத அல்லது தெற்கில் உள்ள சில மிதவாதக் கட்சிகள் கூட அதன் பரிந்துரையை கடுமையாக எதிர்த்தன. யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களாகியும் இந்த நிலைப்பாடு மென்மையடைந்துள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை, ஆனால் இன்றுவரை எந்த சிங்கள மேலாதிக்கக் கட்சியும் அதற்கு ஆதரவு தெரிவிக்க முன்வரவில்லை.

"ஐயங்கள் உள்ளன, அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதை நாம் நியாயமான முறையில் தீர்க்க வேண்டும், அதன் மூலம் 2023 பெப்ரவரி 04 க்குள் ஜனாதிபதியின் எண்ணப்படி நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகளாக எழுந்து நிற்க முடியும்" என்று சுமந்திரன் கூறினார்.

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன **(SLPP)** நா. உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க புதன்கிழமை விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்துப் பேசுகையில் "இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையை மதிக்கும் ஒரு தீர்மானத்துக்கு மட்டுமே ஆதரவளிக்க முடியும்" என்றார். "நீங்கள் ஒரு ஒற்றையாட்சி இலங்கைக்குள் ஒருமித்த கருத்தைக் கேட்கிறீர்கள் என்றால் அதனை நாங்கள் ஒப்புக்கொள்வோம். அதற்கு வெளியே, பெரும்பான்மையான மக்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. இங்கே ஒரு அடிப்படை உண்மை உள்ளது. ஒற்றையாட்சி அரசைப் பாதுகாப்பதற்காக எமது படையினர் தமது இன்னுயிர்களை தியாகம் செய்தனர்" என்று குமாரதுங்க கூறினார்.

(ஆங்கில மூலம் **https://economynext.com/sri-lanka-ethnic-issue-tna-accepts-presidents-overture-mp-suggests-party-ready-to-talk-federal-104106/.** தமிழாக்கம் - கனடா நக்கீரன்)

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# வாழ வழியின்றித் தவிக்கும் எல்லையோர தமிழர்கள்

## (கனடா உதயனின் சிறப்பு தொடர் - பாகம்-01)

- யாழ்ப்பாணம் செய்தியாளர் நடராசா லோகதயாளன்



**ஆ**சியாவின் அதிசயம் என்று இலங்கை தன்னைக் கூறிக்கொள்கிறது.

ஆம் 10 வயது மாணவர்கள் எவ்வித வசதியுமின்றி அன்றாடம் 12 கி.மீ தூரம் நடந்து சென்று கல்வி கற்பது அதிசயம் தானே?

தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களை திருப்பியளித்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவாத ஒரு அரசு செயல்படுவதும் ஆசியாவின் அதிசயம் தானே?

தாய்நாட்டை நம்பி தமிழகத்தைவிட்டு மீண்டும் நாடு திரும்பியவர்கள் நிர்க்கதியாக கைவிடப்பட்டுள்ளதும் ஆசியாவின் அதிசயம் தானே?

அதிசயங்களை அள்ளிவீசி மக்களை ஆச்சரியப்பட வைப்பதற்கு இலங்கைக்கு நிகர் யாருமில்லை என்பதில் யாரும் மாறுபட முடியாது தானே?

வெலி ஓயா ஒருபுறமும் பொபஸ்வேவா என அரசு உருவாக்கிய சிங்கள குடியேற்றங்களின் நடுவே எந்த ஒரு அடிப்படை வசதிகளும் அற்றுத் தவிக்கும் 47 குடும்பங்கள் மட்டுமே வாழும் காஞ்சிரமோட்டை என்ற தமிழ்க் கிராமத்தின் அவலத்தைப் போக்க எவருமே முன் வரவில்லை என அப் பகுதி மக்கள் கண்ணீர் கதையாக கூறியதனை அடுத்து அந்த அதிசயத்தை கனடா உதயனுக்காக பிரத்தியேகமாக எடுத்து வரும் நோக்கில் கடும் மழை, சேர் சகதிகளிற்கு இடையே ஓர் பயணத்தை மேற்கொண்டேன்.

அந்த கிராமம் தொடர்பில் பூரண விளக்கம் கொண்டவரின் உதவியை நாடி அந்த இடத்தின் வரலாற்றையும் கேட்டறிந்தவாறு பயணித்தோம்.

இப்பகுதியிலுள்ள நாவல்பண்ணை பாடசாலைக்காக 107 ஆண்டுகளுக்கு முன்னர் (1915) 23 தனியாரிடம் காணி வேண்டி பாடசாலை அமைத்த உறுதி அந்த மக்களிடம் இன்றும் சான்றாக இருப்பது ஐயத்திற்கு இடமினிறி அதற்கு முன்பே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தமை நிரூபணமாகிறது. எனினும், இலங்கையில் நிலவிய போரும் அரசின் திட்டமிட்ட வலிந்த சிங்கள குடியேற்றங்களும் இக்கிராமத்தையும் சீரழித்தன.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பிரதேச செயலாளர் பிரிவில் எல்லையோரம் உள்ள காஞ்சிரமோட்டையில் தற்போது வாழும் 47 குடும்பங்களிற்குகூட போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் அந்த மக்கள் மீண்டும் தமது கிராமத்தை கைவிட்டு வெளியேறும் மனநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மருதோடைக் கிராம சேவகர் பிரிவிலேயே இந்த காஞ்சிரமோட்டைக் கிராமம் உள்ளது.

வவுனியா நகரிலிருந்து 75 கிலோ மீற்றர் தொலைவிலும் புளியங்குளம் சந்தியிலிருந்து 27 கிலோ மீற்றர் தொலைவிலுமாக உள்ள கிராமமாகவுள்ள இந்த காஞ்சரமோட்டை விடியலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இங்கு வாழ்ந்த மக்கள் 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின்போதும், 1990 மற்றும் 1995 ஆகிய காலங்களில் பகுதி பகுதியாக இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு பலர் வெளியேறியபோதும் 1994 ஆம் ஆண்டுக் காலப் பதிவுகளின்படி இங்கே 367 குடும்பங்கள் வாழ்ந்துள்ளனர்.

இவர்களில் அநேகர் அருகே இருந்த நாவலர் பண்ணையில் பணியாளர்களாகவும் வயல் விதைப்புகளிலும் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை முன்னெடுத்தனர்.

இறுதியாக 1995 ஆம் ஆண்டு அனைத்து மக்களும் இடம்பெயர்ந்த நிலையில் பல நூறுபேர் தமிழ்நாட்டிற்கும் சென்றனர். அவ்வாறு சென்ற



மக்கள் போரிற்குப் பின்பு அனைத்தும் வழமைக்குத் திரும்பிவிட்டன, தாயகம் திரும்புங்கள் என்று விடுக்கப்பட்ட அழைப்புகளை நம்பி இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 47 குடும்பங்கள் 2016 இல் தாயகம் திரும்பியுள்ளனர்.

தாயகம் திரும்பிய குடும்பங்களை அவர்களது சொந்தக் கிராமத்தில் குடியேற விடாது வனவளத் திணைக்களம் தடையாக இருந்தமையால் நீண்ட இழுபறிகளின் மத்தியில் அப்போதை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன் மற்றும் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரது முயற்சியினால் 2017ஆம் ஆண்டு தமது சொந்த கிராமத்திற்கு திரும்பியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்படி குடியேறியவர்களை நிம்மதியாக வாழ இன்று வரை வனவளத் திணைக்களம் விடவில்லை. மருதோடையில் இருந்து காஞ்சிரமோட்டை வரையான 6 கிலோ மீற்றர் வீதி இற்றைவரை மண் வீதியாகவே காட்சியளிக்கின்றது. சேறும் சகதியுமாக காட்சியளிக்கும் செம்மண் சாலையிலேயே இங்கே வாழும் பள்ளிச் சிறுவர்கள் தினமும் 12 கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகப் பயணித்தே கற்கின்றனர் என்கின்ற அதிர்ச்சியான தகவல் வெளி உலகிற்குத் தெரியாது. அத்தி பூத்தாற் போல் எப்போதாவது அவர்களிற்குச் சைக்கிளில் செல்லும் வாய்ப்பு கிட்டும்.

பத்து வயதே ஆன தரம் 5 வரை கற்கும் மாணவர்கள் மருதோடை அ.த.க.பாடசாலையிலும் அதற்கு மேல் ஒலுமடு மகா வித்தியாலயமும் செல்ல வேண்டும். இவ்வாறு கல்வி கற்கும் 17 மாணவர்கள் காலை 6 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டாலே 7.30 மணிக்கு பாடசாலைக்குச் செல்ல முடியும். பின்பு மாலை 3 மணிக்கு பிறகே வீடு திரும்புவர் அதாவது ஒரு நாள் கற்றலிற்காக சுமார் 10 மணி நேரத்தை அவர்கள் செலவிட வேண்டியுள்ளது. பாடசாலை செல்லும் பிள்ளையையுடைய தகப்பன் என்ற வகையில் இது எனக்கு போர்க்காலச் சூழலையே தற்போதும்



நினைவுபடுத்துகின்றது.

மாணவர்கள் தனித்துச் சென்று வரும் பாதையைப் பார்வையிட எண்ணி காலை 8.30 மணிக்கு அங்கு சென்றோம். அவ்வாறு செல்வதற்கு சற்று முன்னரே அப்பாதையினால் யானை சென்ற தடயமாக அதன் லத்தி (சாணம்) ஆவி பறக்க காணப்பட்டது. என்னுடன் வந்தவருக்கு அவரின் ஆவி பறக்கும் அளவிற்கு பயம் தொற்றிக்கொண்டது.

ஆனால், தமிழர்களுக்கே உரிய துணிச்சலுடன் இந்தப் பாதையின் ஊடாகவே 10 வயதுச் சிறுமி சர்வ சாதாரணமாக கால்நடையாகப் பயணித்து வந்ததுகொண்டிருந்தமை எம்மை வியப்பில் ஆழ்த்தியது. அவ்வாறு பயணிக்கும் வீதி 10 அடி அகலம்கூட இல்லை. அதன் இரு புறமும் பெரும் பற்றைகள் நிறைந்து காணப்படுவதனால் பகல் வேளையில் யானை ஒன்று நின்றால்கூட அடையாளம் காணமுடியாது. அவ்வாறான சூழலில் இரவு ஒரு அவலம் எனில் எவ்வாறு பயணிக்க முடியும் என்ற ஐயத்துடன் கிராமத்திற்குள் பிரவேசித்தோம்.

அங்கு மேலும் அதிசயங்கள் காத்திருந்தன.

இம்மக்களின் ஒரேயொரு வாழ்வாதாரமாக விவசாயம் மட்டுமே காணப்படுகின்றது. அதை அன்றாடம் வனவிலங்குகளின் அச்சத்திற்கு இடையிலேயே அவர்கள் முன்னெடுக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் அருகே காட்டுபூவரசங்கும், காஞ்சிரமோட்டை குளங்களின் கீழ் 600 ஏக்கர் வயல் நிலங்கள் உள்ளன. ஆனாலும் இந்த 47 குடும்பங்களிற்கும் சொந்தமாக வயல் நிலம் ஏதும் கிடையாது. ஏனையவர்களின் வயலிற்கு தினக்கூலியாகச் செல்ல வேண்டும் அல்லது அருகே 1983 ஆம் ஆண்டிற்கு முன்பு இவர்களிற்கு வழங்கப்பட்டு, இன்று தமது நிலம் என வனவளத் திணைக்களம் உரிமை கோரி சர்ச்சையில் உள்ள வயலில் விவசாயம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வாழும் குடும்பங்களின் பயன்பாட்டிற்காக 4 கிணறுகள் மட்டுமே உள்ளன.

தற்போது இங்கு வாழும் 47 குடும்பங்களில் 5 குடும்பங்களின் வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவற்றில் 25% பணிகள்கூட முடியாத நிலையிலேயே அந்த அடர்ந்த வனப்பகுதியில் உயிராபத்தில் குடியிருக்கின்றனர். அப்படி குடியிருக்கும் மக்களின் வாழ்வு அந்த மக்களிற்கு எவ்வளவு முக்கியமோ அதனைவிட ஒட்டு மொத்தமான தமிழ் இனத்திற்கே இன்று முக்கியத்துவம்பெற்று நிற்கின்றது.

எவ்வாறு அவர்களின் இருப்பு இனத்தின் இருப்பை காக்கின்றது?

காஞ்சிரமோட்டைக்கு அருகில் ஒரு திசையில் வெலிஓயா (மணலாறு) 2 கிலோ மீற்றர் தூரத்திலும் மறுபுறத்தில் போகஸ்வெ (அதன் உண்மை பெயர் அரசகுளம்) சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திலும் உள்ள நிலையில் அக்கிராமம் மண்வளைப்பு ஆபத்தை எதிர்நோக்குகிறது




என்பது மேலும் அதிர்ச்சியளித்தது.

இனங்களுக்கிடையேயான எல்லையில் இருக்கும் இந்த மக்கள் குடியிருப்புக்கள் இன்றி, காவல் கொட்டகைகளை ஒத்த வடிவத்தில் எந்த ஒரு சுற்றுச்சூழல் பாதுகாப்பும் இன்றி தமது காணியின் எல்லையைக்கூட அடையாளமிட முடியாதவர்களாகவே உள்ளனர்.

நான்கு பக்கமும் யானை, கரடி, பாம்பு, காட்டுப்பன்றி ஆகியவற்றின் அச்சத்திற்கிடையே வனப்பகுதியில் வாழும் இந்த மக்களிற்கு மின்சார இணைப்பைக்கூட வழங்க விடாது மின்சார சபை சுமார் ஒரு வருடமாக தடை போட்டு அந்த மக்களை இருட்டில் வைத்திருந்தனர்.

மருதோடையில் இருந்து காஞ்சிரமோட்டைக்கு செல்லும் வீதியில் சில மரங்கள் 25 வருடமாக பெரிய அளவில் வளர்ந்து நின்றபோது அவை வனவளத் திணைக்களத்திற்கு உரியவை எனவும் அவற்றை தறிக்க முடியாது என வனவளத் திணைக்களமும் அவற்றை அகற்றினாலே அங்கே மின்கம்பங்களை நாட்ட முடியும் என இலங்கை மின்சார சபையும் மாறி மாறி காரணங்களைக் காட்டி காலத்தை கடத்தும் அவலமும் நிலவியது.

இதன்போது 15ற்கும் மேற்பட்ட பாரிய மரங்கள் பாதையில் வருவதனால் அகற்றவே முடியாது என வனவளத் திணைக்களம் அடம்பிடித்தபோது இறுதியில் இ.மி.சபை நீண்ட ஆய்வின் பின்னர் 6 மரங்களை தறித்து உதவினாலே தம்மால் மின் இணைப்பை வழங்க முடியும் என்றனர். இதையாவது மேற்கொண்டு எவ்வாறானாலும் மின்சாரத்தைப் பெற்று வழங்க "நல்லாட்சி" எனச் சொல்லப்பட்ட ஆட்சியில் அவர்களிற்கு மின்சாரத்தை பெற்றுக் கொடுக்கவும் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் ஆகியோருடன் பிரதேச செயலாளர் பரந்தாமன் முயன்றனர். இருப்பினும் "நல்லாட்சி" அரசிற்கு ஆதரவளித்த கூட்டமைப்பிற்கு இங்கு மின்வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஓராண்டானது என்று விமர்சனம் உள்ளது. அதற்கிடையே இக்கிராமத்திற்கு ஓரளவேனும் ஒளியைப் பெற்றுத்தர சூரிய மின்கலத்தின் உதவியுடனான வசதியை கனடாவாழ் நண்பர்கள் உதவியுடன் ப.சத்தியலிங்கம்



ஏற்படுத்திக்கொடுத்தார்.

ஆனாலும், அவை போதுமானவையாக இருக்கவில்லை. மேலும் அந்த சூரியசக்தி மின்வசதியும் கூட எந்த வீட்டிற்கும் கிட்டாது பாதைகளிற்கே ஒளியூட்டியது என்பதும் அதிசயம் தானே?

**(அதிசயங்கள் தொடரும்)**

சினிமா

# தமிழ் சினிமாவில் 30 ஆண்டுகளை நிறைவு செய்த நடிகர் விஜய்



நடிகர் விஜய் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி 30 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். 1992 இல் நாளைய தீர்ப்பு திரைப்படம் வெளியாகும் போது எஸ்.ஏ.சந்திரசேகர் கூட நினைத்திருக்க மாட்டார். அந்த அளவிற்கு விஜய்யின் வளர்ச்சி ஒவ்வொருவரையும் மலைக்க வைத்துள்ளது. இந்த வெற்றிக்கு பின்னால் விஜய் சந்தித்த அவமானங்கள் சிறிதல்ல. 100 கோடி வசூல் சாதனை, 200 கோடி வசூல் சாதனை என தமிழ் சினிமாவை இன்று உலகமே திரும்பி பார்க்கிறது என்றால் அதற்கு பின்னால் விஜய்யின் படங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது.

சினிமாவில் மட்டும் மக்களுக்கு நல்லது செய்யாமல் தனிப்பட்ட முறையிலும் விஜய் தன்னால் முடிந்த உதவிகளை விஜய் மக்கள் இயக்கம் மூலமாக செய்து வருகிறார். அதனால் தான் ரசிகர்கள் அவரை தளபதி என்று அன்போடு அழைக்கின்றனர். குறிப்பாக கொரோனா காரணமாக பல திரையரங்குகள் மூடப்பட்ட நிலையில் திரையரங்குகளை நோக்கி ரசிகர்கள் வருவார்களா என்ற எதிர்பார்த்ததை உடைத்து மிகப்பெரிய வசூல் சாதனை படைத்தது விஜய்யின் மாஸ்டர் திரைப்படம். இப்படி தமிழ் சினிமா மட்டுமல்லாமல் தெலுங்கு, மலையாளம் என தொடர்ந்து உச்சத்தை தொட்டு சாதனை படைத்து வருகிறது விஜய்யின் திரைப்படங்கள். காதல், ஆக்ஷன், நகைச்சுவை, சென்டிமென்ட் என 30 ஆண்டுகளாக நம்மை ரசிக்க வைத்தார் நடிகர் விஜய்.




# அமீர் நடிக்கும் "உயிர் தமிழுக்கு" படத்தின் முதல் பதாகை

இயக்குநர் அமீர் நாயகனாக நடிக்கும் "உயிர் தமிழுக்கு" படத்தின் முதல் பார்வை அவரது பிறந்தநாளையொட்டி வெளியாகியுள்ளது. மூன் பிக்சர்ஸ் சார்பில் தயாரிப்பாளர் ஆதம்பாவா இயக்கி தயாரிக்கும் படம் "உயிர் தமிழுக்கு". அமீர் நாயகனாக நடிக்கும் இப்படத்தில் சாந்தினி, ஸ்ரீதரன், ஆனந்த்தராஜ், இமான் அண்ணாச்சி, மாரிமுத்து, ராஜ் கபூர், சுப்ரமணியசிவா, மகாநதி சங்கர், ராஜசிம்மன், சரவணசக்தி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

"உயிர் தமிழுக்கு" படத்திற்கு தேவராஜ் ஒளிப்பதிவு செய்ய, அசோக் சார்லஸ் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார். இந்தப் படத்திற்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார். பாடல்களை பா.விஜய் எழுத, அரசியல் பின்னணியில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் வசனங்களை பாலமுரளி வர்மன் மற்றும் அஜயன்பாலா இருவரும் இணைந்து எழுதியுள்ளனர். இப்படத்தினை தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

# மிகவும் பிரபலமான இந்திய நடிகர்கள் பட்டியல் முதலிடத்தில் தனுஷ்



இந்திய நடிகர்களில் மிகவும் பிரபலமான பட்டியலில் நடிகர் தனுஷ் முதலிடம் பிடித்துள்ளார். நடிகை ஆல்யாபட் இரண்டாவது இடத்திலும், ஐஸ்வர்யா ராய் 3வது இடத்திலும் உள்ளனர். சர்வதேச அளவில் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஓடிடி படைப்புகள் உள்ளிட்டவற்றின் தகவல்களை சேகரித்து வழக்கும் ஆன்லைன் தரவு தளமாக செயல்படுகிறது ஐஎம்டிபி.

இதன் சார்பில், மிகவும் பிரபலமான நட்சத்திரங்களை பட்டியல் ஆண்டு இறுதியில் வெளியாவது வழக்கம். அதன்படி 2022ம் ஆண்டின் டாப் 10 இந்திய நட்சத்திரங்களின் பட்டியல் வெளியாகி இருக்கிறது. இந்த பட்டியலில் இந்திய அளவில் முதலிடம் பிடித்துள்ளார் நடிகர் தனுஷ்.

தனுஷை தொடர்ந்து 2-ம் இடத்தில் பாலிவுட் நடிகை ஆலியா பட் வருகிறார். இந்த வருடத்தின் பிரம்மாஸ்திரா-1, ஆர்ஆர்ஆர், கங்குபாய் உள்ளிட்ட படங்கள் அலியாபட்டுக்கு கைகொடுத்திருக்கிறது. மூன்றாம் இடத்தில் பொன்னியின் செல்வன்-1 படத்தில் நடித்திருக்கும் ஐஸ்வர்யா ராய் இடம்பிடித்திருக்கிறார்.

# 70 — களில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சிவாஜியின் 7 படங்கள்.. வெள்ளி விழா கொண்டாடிய வசந்த மாளிகை



70, 80"ஸ் காலகட்டத்தில் டாப் ஹீரோக்களில் ஒருவராக மக்கள் மனதில் ஆதிக்கம் செலுத்திய நடிகர்களுள் ஒருவர் செவிலியர் சிவாஜி கணேசன். இவர் நடிக்கும் படங்களில் நடிப்பையும் தாண்டி அந்த கதாபாத்திரத்திற்கு உயிரூட்டி இருப்பார். நடிகர் திலகம் என்றால் சிவாஜி கணேசன் தான் என்ற அளவிற்கு தனது நடிப்பு திறமையால் தமிழ் திரை உலகில் ஆதிக்கம் செலுத்தினார். இவருடைய நடிப்பில் 70-களில் வெளியான 7 படங்கள் தொடர் வெற்றிகளை தந்தது மட்டுமல்லாமல் வெள்ளி விழாவும் கண்டுள்ளது.

நீதி: 1972 ஆம் ஆண்டு இயக்குனர் சி வி ராஜேந்திரன் இயக்கத்தில் வித்தியாசமான கதை அமைப்பில் வெளியாகி திரையில் ஆதிக்கம் செலுத்தி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளது. படத்தில் சிவாஜி கணேசன் உடன் ஜெயலலிதா, சௌகார் ஜானகி, மனோரமா உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

நீதி திரைப்படத்தில் ராஜா என்னும் கதாபாத்திரத்தில் கொலைக் குற்றவாளியாக நடித்திருப்பார். இதில் இவருக்கு கிடைக்கும் 2 ஆண்டு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி கொடுக்கும்படி உத்தமமான மனிதராக நடித்து அசத்தி இருப்பார். இதனால் பலரின் நெஞ்சத்தை கரைய வைத்த இந்த படம் திரையில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வசூல் சாதனை படைத்தது.

ஞான ஒளி: இயக்குனர் பி மாதவன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், விஜய நிர்மலா, சாரதாஸ் மற்றும் ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னணி கதாபாத்திரத்தில் நடித்திருப்பர். இதில் சிவாஜியின் நடிப்பு பல முன்னணி நடிகர்களையும் ஆச்சரியப்பட வைக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கும். ஞான ஒளி படம் 100 நாட்களுக்கு மேல் திரையில் ஓடி வெற்றி பெற்றது.

பட்டிக்காடா

பட்டணமாம்: ஞான ஒளி படத்தின் வெற்றியை தொடர்ந்து சிவாஜி கணேசன் பி மாதவனின் கூட்டணியில் பட்டிக்காடாம் பட்டினமாம் என்ற படத்தின் மூலம் மீண்டும் இணைந்தது. இதில் சிவாஜி கணேசன் உடன் ஜெயலலிதா, சுபா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் திரையில் 200 நாட்களுக்கு மேல் ஓடி வெள்ளி விழா கண்டு சாதனை படைத்தது.

தர்மம் எங்கே: இயக்குனர் ஏ.சி. திரிலோக சந்தர் இயக்கத்தில் வெளிவந்த இப்படத்தை சாந்தி பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இதற்கு எம்.எஸ் விஸ்வநாதன் இசையமைத்துள்ளார். இதில் சிவாஜி கணேசன், ஜெ ஜெயலலிதா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஆனால் இந்த படத்திற்கு வசூல் ரீதியாக நல்ல வரவேற்பு கிடைக்காவிட்டாலும் ரசிகர்களின் மனதைக் கவர்ந்த படமாக அமைந்தது.

தவப்புதல்வன்: அதே ஆண்டு வெளியான இப்படத்தை முக்தா ஸ்ரீனிவாசன் இயக்கியுள்ளார். இதில் சிவாஜியுடன் கேஆர் விஜயா, பண்டாரிபாய் மற்றும் பலர் நடித்துள்ளனர். சிவாஜி கணேசன் மற்ற ஹீரோக்களுக்கு டஃப் கொடுக்கும் விதத்தில் நடித்து தனது திறமையை வெளிப்படுத்தி இருப்பார். இப்படம் திரையில் 100 நாட்களுக்கு மேல் ஓடி சாதனை படைத்த படங்களில் ஒன்றாக அமைந்தது.

வசந்த மாளிகை: இயக்குனர் கே எஸ் பிரகாஷ் ராவ் இயக்கத்தில் வெளிவந்த வசந்த மாளிகை திரைப்படம் அந்த ஆண்டின் மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படங்களில் ஒன்றாகும். இதில் சிவாஜி கணேசன், வாணிஸ்ரீ, பி எஸ் ராகவன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். திரையில் 200 நாட்களுக்கு மேல் ஓடி அந்த காலகட்டத்திலேயே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூல் சாதனை படைத்தது. இப்படத்தில் சிவாஜி கணேசனின் கதாபாத்திரம் ரசிகர்கள் மத்தியில் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

ராஜா: இது நடிகர் திலகத்தின் நடிப்பில் வெளியான மெகா ஹிட் திரைப்படங்களில் ஒன்று. இதில் சிவாஜி கணேசன் உடன் ஜெயலலிதா நடித்திருப்பார். இப்படம் 100 நாட்களுக்கு மேல் ஓடி சாதனை படைத்து சிவாஜி கணேசனின் வருடமாக்கியது. படத்தில் சிவாஜி கணேசனின் தோற்றம் ரசிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கும்.

இவ்வாறு 1972 ஆம் ஆண்டில் மட்டும் சிவாஜி தொடர் 7 வெற்றிகளை குவித்து அந்த ஆண்டின் நாயகனாகவே மாறினார். அத்துடன் சிவாஜியின் வசந்த மாளிகை, பட்டிக்காடா பட்டினமாம் என்ற இரு படங்களும் வெள்ளி விழா கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI

## Pawn Brokers





30 வருட சேவைகள்

## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.**™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2


416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198

# மொன்றியால் மாநகரில் திரையிடப்பெற்ற கனடிய தயாரிப்பான "ஒருத்தி - 2"

## - தயாரிப்பாளர் பி. எஸ். சுதாகரன்



கடந்த சனிக்கிழமை (03-12-2022) மொன்றியலில் முதன்முதலாக ஒருத்தி பாகம் 2 திரைப்படம்திரையிடப்பட்டது. திரு. P. சுதாகரன் அவர்களின் கதைஉருவாக்கத்தில் அமைந்த இந்ததிரைப்படமானது கனடாவைக் களமாகக் கொண்டு காலத்தின் தேவைக்கேற்ற விடயத்தைகதைக்குரிய கருவாகக் கொண்டு எந்த ஒரு இடத்திலும் கதை தொய்வடையாது மிகத்தெளிவானகாட்சி அமைப்போடும் நல்ல பாடல்களோடும் நகைச்சுவைகளோடும் வெளியாகியுள்ளது. இப்படமும் "எம்மவரின் திறமைக்குச் சான்றான படங்களுள் ஒன்று" என்று பார்த்தவர்கள் பலரும் பேசும்படியாகஅமைந்திருந்தது.

தொழிற்துறைகள் விரைவாக வளர்ச்சி அடைந்துவரும் இன்றைய காலகட்டத்தில் நம் இளைய தலைமுறையினரின் பங்களிப்பும் அவர்கள் தொழிலிற்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் கடின உழைப்பும் அதனால் குடும்ப உறவுகளில் உண்டாகும் இடைவெளிகளும் அதனால் உண்டாகும்பிரச்சினைகளும் என்பதோடு தொழில் சார் போட்டிகளும் அதனால் உண்டாகும் இடையூறுகளும்என இத்தனை விடயங்களை உள்ளடக்கியதாக கதை அமைந்துள்ளது.

அதேவேளை நடுத்தர வயதுடைய பெற்றோர்களின் மனநிலையும், அவர்களது புரிந்துணர்வும் இன்றைய காலத்துப் பிள்ளைகளோடு அவர்கள் அணுகும் முறைகளும் அத்தோடு சில தொழில்களில்தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள முனையும் பொண்களிற்குப் பிறக்கும் பிள்ளைகளின் மனநிலையும் அந்தப் பாத்திரங்களின் உரையாடல் மூலமாகவும் வெளிக் கொணரப்பட்டுள்ளது.




கதையின் தலைப்புக்கு ஏற்ப இத்தகைய சவால்களை அந்த கலையரசி என்ற பாத்திரம் குடும்பப்பெண்ணாக எப்படி எதிர் கொள்கின்றாள் என்பதே இந்தக் கதை.

இக்கதையில் நகைச்சுவைக் காட்சிகளும் கதைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அறிவு பூர்வமானவிடயங்களை எடுத்துக் கூறுவனவாக அமைந்திருந்தன. இந்த நகைச்சுவைகள் இரசிக்கக்கூடியனவாகவும் அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதில் நடித்த ஒவ்வொருவரும் தமது பாத்திரங்களை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் மிகவும்சிறப்பாகவும், இயல்பாகவும் நடித்திருப்பது உண்மைச் சம்பவம் போன்ற உணர்வைஏற்படுத்துகின்றது.

கதாநாயகிப் பாத்திரமாக வரும் கலையரசிக்கு கதையின் கலைப்புக்கு ஏற்றாற்போல் அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கதைக்கு ஏற்ப அவரின் நடிப்பும் மிக இயல்பாக இருந்தது. ஒப்பனைகளும் களத்திற்கு ஏற்றவகையில் அழகாகச் செய்யப்பட்டிருந்தன. மிகவும் துணிச்சலானகடமையிலே கண்ணாக எத்தகைய இடையூறு வந்தாலும் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பைச்செய்யவேண்டும் என்றகொள்கை கொண்ட பெண்ணாகவும் இங்கு கதாநாயகிசித்திரிக்கப்படுகிறாள். இந்த கதாபாத்திரம் இன்றைய இளைய தலைமுறைப் பிள்ளைகள் துணிவுமிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்கூறுகின்றது.

கதாநாயகன் வினோத்தும் தனக்குரிய பாத்திரத்தை மிகவும் கனகச்சிதமாக நடித்துக்கொடுத்துள்ளார். அவரின் முகபாவங்கள், உணர்வுகள் பார்ப்பதற்கு ஜதார்த்தமாகவே இருந்தன. இக்கதையில் ஒரு இயல்பான குடும்பஸ்தருக்கு இருக்கும் எதிர்பார்ப்புக்கள் அவர் மூலமாகவெளிக்கொணரப்பட்டுள்ளது.

சமமான அந்தஸ்துக் கொண்ட சம்பந்திகள், அவர்களின் மனப்பாங்கு, பிள்ளைகளின் வாழ்க்கையில் குழப்பங்களை ஏற்படுத்தும் பெற்றொர்களாக இராது ஒரு புரிந்துணர்வு உள்ள பெற்றோர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இவர்களது இயல்பான நடிப்பும் வார்த்தைப் பிரயோகங்களும் ஈழத்தமிழ்க் குடும்பங்களில் வாழும் பல பெற்றோர்களைக் கண்முன் கொண்டுவருகின்றது. முன்னைய காலத்துஓரளவு வயதான பெற்றோரின் உணர்வுகளில் இருந்து இவர்கள் கொஞ்சம் வித்தியாசமானவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். முன்னைய பெற்றோர் உணர்வுகளுக்கு மிகஅதிகமான முக்கியத்துவம் கொடுப்பதால் பிள்ளைகளின் பிரச்சினைகளில் தாங்கள் அதிகளவில் தலையிடுவதுண்டு. ஆனால் இங்கு காட்டப்படும் பெற்றோர் பிள்ளைகளது மனத்திற்கும், இன்றையவாழ்க்கை முறைக்கும் ஏற்ற விதத்தில் தமது உணர்வுகளை அளவுடன் வெளிப்படுத்தி பிள்ளைகளது உணர்வுக்கும் அறிவிற்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

இயல்பாகவே சினிமாக்களில் வரும் வில்லன் பாத்திரங்களும் கூட இங்கு வருகின்றன. தொழில்சார் வில்லன்களாக அவர்கள் நடித்துள்ளனர். அவர்களது வில்லத்தனமும் நடிப்பும் அவர்களது நடை, உடை பாவனைகளும் சிறப்பாக அமைந்திருந்தன.

வில்லன்கள் கூட நாகரிகமான வில்லன்களாகக் காட்டப்பட்டமை சிறப்பு.

நகைச்சுவைக் காட்சிகள் குறைவு ஆனாலும் இடங்களுக்கு ஏற்றாற்போல் நகைச்சுவைநடிகர்களும் தமது நடிப்பைத் திறம்படச் செய்துள்ளனர். அதிலும் கதாசிரியர் தன் கதைக்கருவிற்குத் தேவையான விடயங்களையும், அறிவு பூர்வமான விடயங்களையும் கூறக்கூடியவர்களாகவே அவர்களையும் பயன்படுத்தியுள்ளார்.

இப்படத்தில் அளவுக்கு மீறிய ஒப்பனைகள் இல்லை. இயல்பான, அளவான, அழகான ஒப்பனைகள் செய்யப்பட்டிருந்தன. ஆடைகள் கூட பாத்திரங்கள் மற்றும் களங்களுக்கு ஏற்ப அமைந்திருந்தது.

கனடாவைக் களமாகக் கொண்டு இயல்பாக கதைக்குத் தேவையான களங்கள் மிகவும் சிறப்பாகக்காட்டப்பட்டுள்ளன. பயம் உண்டாக்கும் இடங்களும் கதைக்கு ஏற்பதற்பத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஒளி, ஒலிப்பதிவுகளும் மிகவும் தெளிவாகவும், துல்லியமாகவும் அமைந்திருந்தன. இரண்டுபாடல்களே ஆனாலும் அவையும் அழகான அர்த்தம் நிறைந்த பாடல்களாக இருந்தன.

இவ்வாறாக பல விடயங்களை இயல்பாகவும் சிறப்பாகவும் வெளிப்படுத்திய இப்படத்தில்வார்த்தைகளாற் காட்டப்படும் பிறந்த குழந்தை நேரடியாகக் காட்டப்பட்டு தாயின் பிரிவை பிள்ளைமூலமாக வெளிப்படுத்தி இருப்பின் இக் கதை இன்னும் உயிர்த்துடிப்பொடு உணர்வுபூர்வமானதாகவும் இருந்திருக்கும். அத்தோடு அது எமது இளம் தாய்மாருக்கு ஒருபடிப்பினையாகவும் அமைந்திருப்பதோடு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருக்கும்.

இப்படத்தில் பாத்திரங்கள் வளர்ந்து சென்றாலும் களங்கள் கூட அகன்று சென்றாலும் முன்னர்குறிப்பிட்டது போல் தான் செய்யும் வேலையில் உறுதியாய் இருக்கும் அந்த "ஒருத்தி" யை மட்டுமே (கருவை) சுற்றியே கதை சென்றதால் படம் முடிந்த பின் அது எனக்கு ஒரு சிறுகதையை வாசித்தஉணர்வை ஏற்படுத்தியது.

இன்றைய காலகட்டத்தில் இளம் தலைமுறையினர் கலாச்சாரச் சீர்கேட்டுக்குள் உள்வாங்கப்படுகிறார்கள் என்பது பலரது ஒட்டுமொத்தமான கவலையாகவும் அதுவே பேசுபொருளாகவும் இருக்கும் போது, இக்காலத்தில் ஒரு நாகரிகமான இளம் தலைமுறையினரை கதையில் காட்டிச்செல்லும் சுதாகரன் இக்கதை மூலம் நல்ல அறிவுரையையும் கூறுகின்றார் என்பதையும் இதில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மொத்தத்தில் எம்மவரின் இந்த திரைப்பட முயற்சி சிறப்பாகப் போற்றி வரவேற்கத்தக்கது.

திரு. P. சுதாகரனுக்கும் அவரது இத் திரைப்படக்குழுவினருக்கும் பாராட்டுக்களைக் கூறிக்கொள்வதோடு எம்மவர் பிற சினிமாக்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எமது ஈழத்துப்புலம்பெயர் கலைஞர்களுக்கும் கொடுத்து அவர்களை ஊக்கிவிக்க வேண்டும், வளர்க்க வேண்டும் அவர்களது சிறந்த முயற்சிகளை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

**உமா மோகன்** (M.A)

## உங்களுக்குத் தெரியுமோ?

*பெண்ணுலகுக்கு நேரும் கொடுமைகள் மாற*
*நன்முறைச் சட்டங்கள் முழு உலகிற்கும் போட*

*இன்னமும் இரண்டு தசாப்தங்கள் வேண்டுமாம்*
*பெண்களுக்கெதிரான வன்முறை*

*ஒழிப்பு நாளில் இம்முறை வெளிவந்த சேதி - இதை*
*வெளிப்படுத்தி விழிப்பை ஏற்படுத்தினார்*

*ஐக்கியநாடுகள் செயலாளர் - அவர்*
*இக்காலத்தில் சொன்னதைக் கேட்டால் - இன்னும்*

*மாறவில்லையே மகாகவியின் குமுறல் - என்றே*
*வேதனை கொள்ளத் தோன்றும்,*

*நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின - என*
*எம்மிற் பலர் நினைப்பதோடு*

*வீட்டுக்குள்ளே பூட்டிய கதையெல்லாம் போய்*
*நாட்டைக் காக்கப் புறப்பட்டாள் பெண்ணென்று*

*மார்தட்டி இருக்குங்கால், இன்னும் பலவிடத்தில்*
*வேர்விட்ட மரங்கள் பல தலைதூக்க விளையுங்கால்*

*அடைமழையால் அழிவது போல், இன்னமும் - பெண்ணினம்*
*இடையறாக் கொடுமைகளால் அழிகிறதாம்*

*பதினொரு நிமிடத்துள் ஒன்றாக*

*"மாட்டை அடித்து வசக்கி தொழுவினில்*
*மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே*
*வீட்டில் எம்மிடம் காட்டவந்தாரதை*
*வெட்டி விட்டோமென்று கும்மியடி" என்ற*

*பாரதி நின்றிதைக் கேட்டிருந்தால் - இன்னும்*
*தீராத இத் துன்பத்துக்கென ஒரு கவி எழுதுவானோ? - அன்றி*

*"இன்னும் மாறாத குணம் கொண்ட அன்பில்லாக் குடும்பத்துக்*
*காட்டு மிராட்டிகளைப்*
*என்றுமே மீளாத கடுங் கூட்டுக்குள் வைத்துப் பூட்டு!" - என்றே*

*முழங்குவானோ யார் அறிவார்?*

*உற்ற உறவும் பெற்ற துணையும்- அவள்*
*ஏற்ற நட்பும் கூட நசுக்குகிறதாம் பெண்ணை*

*போதாததற்கு கொரோனா என்ற கொள்ளைநோய்*
*தாராளமாக கொடுத்ததாம் பெரும் தர்க்கங்களை- தவறான*

*இணையவழித் தொடர்புகளும் உடனிருந்தே*
*கணிசமாக அழிக்கிறதாம் பெண்ணினத்தை*

*நாலுக்கு ஒரு பெண்ணாக - இது*
*போலிக்கதை அல்ல ஐக்கிய நாடுகளின்*

*ஐயாவின் கூற்று அதனால் - இதை*
*மெய்யாக நம்பிடலாம்*

*"சாத்திரங்கள் பல பல கற்பராம்*
*சவுரியங்கள் பல பல செய்வராம்*
*மூத்த பொய்கள் யாவுமழிப்பராம்*
*மூடர் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்" - இதில்*

*எதனைச் செய்யவில்லை பெண்ணினம்? - இன்றும்*
*வேதனைக்கு உரியதேன் இவ்வினம்?*

***-- உமா மோகன் - Montreal- Canada --***



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1026



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

"பூரணைக் கிறைவர போற்றி
புட்கலை கணவா போற்றி
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் களைவாய் போற்றி
ஆரணச் சுருதி எல்லாம்
ஆடல் உருத்திர அண்ணலென்று
காரணங் கருதி ஏத்தும்
கடவுளே போற்றி போற்றி"

ஆரம்ப காலத்திலிருந்து ஐயனார்வழிபாடு, கிராமிய வழிபாட்டு முறை தழுவியதாகவே காணப்பட்டுள்ளது. பிற்காலத்திலே இவ்வழிபாடு ஆகமநெறிக்குட் பட்டதாக மாற்றம் பெற்றுள்ளது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்தில், 1970 ஆம் ஆண்டுவரை சடங்குகளைப் பூசாரிகளே செய்து வந்துள்ளனர். ஆனி மாதத்து பூர்வபட்சத்து நாலாம் பிறைக்கு முன், புதன், சனி, ஆகிய வாரங்கள் தவிர்ந்த நாட்களில் சடங்கு நடைபெறுவது வழக்கம். ஈழத்திலுள்ள ஐயனார் கோயிலின் சடங்கு முறைகள் ஊருக்கேற்ப தனித்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆரையம்பதி ஐயனார் கோயிலில் சடங்கு செய்யும் பூசாரி, முறைப்படி நோர்ப்புக் கட்டியபின் சடங்கு நடைபெறும். மஞ்சள் சோற்றைச் சமைத்து, சாமவேளையிலே அதனை ஒரு முடிச்சிலே கட்டி, ஆலயத்தின் முன்பு தொங்க விடுவதையே நோர்ப்புக் கட்டுதல் என்று கூறுவர். நோர்ப்புக் கட்டியபின் அடுத்த நாளே பரமநயினார் சடங்கு நடைபெறும்.

பரமநயினாரின் கணங்களாக வதனமார் கோலத்திலும், மாரியம்மன், பேச்சியம்மன், வீரபத்திரன் முதலிய தெய்வங்களின் கோலங்களிலும் உருக்கொண்டு ஆண்கள் ஆடுவார்கள். வதனமாரின் உருவிலே வருவோர் வில், அம்பு, பொல்லு ஆகியவற்றைக் கையிலேந்தியவண்ணம் ஆடுவார்கள். மாடுகளைப் பிடிக்கும் பாவனையில் மழுக் கயிற்றை வீசி, ஆட்களை இழுப்பர். தெய்வங்களின் பாவனையிலே ஆடுவோரை மந்திவாதிகள் படுகளம் போட்டு ஆடவிடாது மந்திரத்தாற் தடுப்பர். எதிர்தரப்பிலுள்ள மந்திரவாதிகள் கட்டுக்களை மந்திரத்தால் வெட்டி, தெய்வ கோலந் தாங்கியவர்களை ஆடவைப்பர். மந்திரவாதிகளிடையே நடைபெறும் போட்டிகளைப் பார்ப்பதற்காக அயற் கிராமங்களிலிருந்தும் மக்கள் பெருந்திரளாக வருகை தருவர். மாந்திரீக முறைகளைத் துறைபோகக் கற்றவரும், அண்ணாவியாராக விளங்கியவருமான பரிகாரி பொன்னம்பலம் என்பவரது காலத்திலே, பரமநயினார் சடங்கு மிக விமரிசையாக நடைபெற்றதாகக் கூறுவர். சடங்கு நடைபெறும் காலத்திலே பரமநயினார் காவியம், பரமநயினார் அகவல், வதனமார் காவியம், வதனமார் அகவல் முதலியன படிக்கப்படும்.

ஆரம்பகாலத்தில் கிராமிய வழிபாடாக இருந்து, பின் ஆகம முறை தழுவிய வழிபாட்டுநெறிக்கு இக் கோயில் மாற்றம் பெற்றிருப்பினும், கிராமிய தெய்வ வழிபாட்டோடு, ஆகம முறை தழுவிய வழிபாட்டு முறைகளும் அவற்றோடு தொடர்புடைய விரதங்கள் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

மட்டக்களப்புத் திருநாட்டில், கண்ணகி வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகப் பலவிடங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. நாடெங்கும் பரவலாகக் கண்ணகி கோவில்களைக் காண முடியும். கண்ணகி கோவில் தவிர்ந்த ஏனைய கோவில்களிலும், வைகாசியில் கண்ணகி அம்மனுக்குரிய சடங்கை சிறப்பாகக் கொண்டாடும் வழக்கம், மட்டக்களப்பிலே காணப்படுகின்றது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்திலும், வைகாசிமாதம் ஏழு நாட்கள் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறுகின்றது. பூரணை நாளன்று திருக்குளிர்த்தி இடம்பெறும். திருக்குளிர்த்தி நிகழ்விலே ஆயிரக்கணக்கிலே மக்கள் கலந்து, தமது வேண்டுதல்களை முன்வைப்பர். திருக்குளிர்த்தியின் பின் மறுநாள் மாலை திருஊஞ்சல் சிறப்பாக நடைபெற்று, இச்சடங்கோடு கண்ணகி அம்மன் சடங்கு நிறைவுபெறும். இக்காலத்திலே நடைபெறும் கண்ணகி அம்மன் சடங்கிலே, ஒரு கரத்தில் சிலம்பினை ஏந்திய ஸ்தானக நிலையிலுள்ள கண்ணகி அம்மனின் உருவத்தை, எழுந்தருளியாக உள்வீதி வழியே கொண்டு செல்வர்.

ஸ்ரீ பரமநயினார் கோயிலில் 1970 ஆண்டும், அதன்பின்னரும் பல தடவைகள் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுள்ளது. இக்கோயிலில் பூரணை நாட்களிலே திருவிளக்குப் பூசை நடைபெறும். புரட்டாதிச் சனி, கந்தசஷ்டி, விநாயகசஷ்டி, கேதாரகௌரிவிரதம் ஆகிய நாட்களில் விசேட பூசைகள் நடைபெறும். புரட்டாதிச்சனி விரதத்தின் இறுதிநாளன்று, சனிக்கிரகத்துக்கு அபிஷேகமும் ஹோமமும் நடைபெறும். கந்தசஷ்டி விரதகாலத்திலும் கந்தப்புராணப் படிப்பும், திருவிழாவும் மிகச் சிறப்பாக இடம்பெறும். கேதாரகௌரி விரத காலத்தில் இருபத்தியொரு நாட்களும் சிவலிங்கத்தின்முன் கும்பங்கள் வைத்து, பூசைகள் நடைபெறும். கார்த்திகைமாதத்தில் மாதம் முழுவதும் சிவலிங்கத்துக்கு முன்னே கும்பங்கள் வைத்து காசிகண்ட பூசையை நிறைவேற்றுவர்.

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் விநாயகர்சஷ்டி விரதம் முக்கியமானது. இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்ற இருபத்தியொரு நாட்களும், விநாயகப்பெருமானுக்குப் பொங்கல் வைத்து, அலங்காரபூசைகள் நிகழ்த்துவர். விநாயகர் விரதத்தின் இறுதிநாளாகிய பெருங்கதை தினத்தில், விசேடமான பெரும்பொங்கல் நடைபெறும். அத்தோடு பல்வேறுவிதமான நிவேதனப்பொருட்களையும் விநாயகருக்கு நிவேதித்து அலங்காரபூசை நடைபெறும்.

*வளரும்...*



# தீவிர புயலாக மாறியது மாண்டஸ்: இந்திய வானிலை ஆய்வு மையம்



வங்கக்கடல்ல் நிலை கொண்டுள்ள மாண்டஸ் புயல் தீவிர புயலாக மாறியுள்ளதாகவும், மணிக்கு 13 கி.மீட்டர் வேகத்தில் நகர்வதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இதுதொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவலில், சென்னையிலிருந்து 440 கி.மீட்டர் தொலைவிலும், காரைக்காலில் இருந்து 350 கி.மீட்டர் தொலைவிலும் மாண்டஸ் புயல் தற்போது நிலை கொண்டுள்ளது. வங்கக்கடலில் தென்கிழக்கு திசையில் நிலைகொண்டுள்ள மாண்டஸ் புயல் தீவிர புயலாக மாறியுள்ளது. தற்போது மணிக்கு 13 கி.மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது.

வெள்ளிக்கிழமை காலை வரை தீவிர புயலாகவே நகர்ந்து, பிறகு சற்றே வலு குறைந்து புயலாக இரவு கடக்கும். வெள்ளிக்கிழமை நள்ளிரவு புதுச்சேரி மற்றும் ஸ்ரீஹரிகோட்டா இடையே மாமல்லபுரம் அருகே புயல் கரையை கடக்கிறது. மாண்டஸ் புயல் கரையை கடக்கும்போது அதிகபட்சமாக 85 கி.மீ வேகம் வரை காற்று வீச வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளது. மாண்டஸ் புயல் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட 20 மாவடங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், புதுச்சேரி மற்றும் காரைக்காலில், வெள்ளி மற்றும் சனி ஆகிய இரண்டு நாட்களுக்கு பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

“மாண்டஸ் புயல் காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை முன்கூட்டியே மீட்டு நிவாரண முகாம்களில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்“ என அனைத்து துறை அதிகாரிகளுக்கும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு ஆலோசனை தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தி: தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் “மாண்டஸ்” புயல் சின்னம் காரணமாக தமிழகத்தில் கனமழை முதல் அதி கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுளதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு துறைகளின் தயார் நிலை குறித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் வியாழக்கிழமை ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய வானிலை ஆய்வு மையம், தனது 08 122022 நாளிட்ட அறிவிக்கையில், நேற்று (டிச.7) தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது “மாண்டஸ்” புயலாக வலுவடைந்து தென்கிழக்கு சென்னையிலிருந்து சுமார் 550 கி.மீ. தொலைவில் நிலைக்கொண்டுள்ளது என்றும், இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து புதுச்சேரி மற்றும் ஸ்ரீஹரிகோட்டவிற்கு இடையே 09.12.2022 அன்று நள்ளிரவு கரையை கடக்கக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மைய அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக 08122022 முதல் 11122022 முடிய 4 நாட்களுக்கு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதி கனமழை பெய்யக்கூடும் எனறும், கடலோரப் பகுதிகளில் மணிக்கு 50 முதல் 70 கிலோ மீட்டர் வரை பலத்த காற்று மற்றும் தரைக்காற்று வீசக்கூடும் என்றும், இந்திய வானிலை ஆய்வு மையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.12.2022 இரவு மாண்டஸ் புயல் கரையைக் கடக்க உள்ள நிலையில், பொது மக்கள் தேவையற்ற பயணத்தை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.› பொது மக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள், காய்கறி மற்றும் பால் ஆகியவற்றை முன்கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.› பொதுமக்கள் கடற்கரைக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.› பலத்த காற்று வீசும் போது மரங்கள்ின் கீழ் நிற்பதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.› நீர் நிலைகளின் அருகிலும், பலத்த காற்று வீசும் போது திறந்த வெளியிலும் தன்படம் எடுப்பதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.› நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க மாவட்ட நிருவாக அறிவுறுத்தும் போது, அதனை ஏற்று நிவாரண முகாம்களில் தங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.› இந்திய வானிலை ஆய்வு மையம், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (முகநூல், டுவிட்டர்), ஜிழிஷிவிகிஸிஜி செயலி மூலம் பகிரப்படும் அதிகாரப்பூர்வமான அறிவுரைகளை பின்பற்ற வேண்டும்.› அதிகாரப்பூர்வ தகவல்களுக்காக வானொலி மற்றும் தொலைக்காட்சியை தொடர்ந்து கவனிக்க வேண்டும்.› மெழுகுவர்த்தி, கைமின் விளக்கு (torch light), தீப்பெட்டி, மின்கலங்கள் (batteries), மருத்துவ கட்டு (band aid), உலர்ந்த உணவு வகைகள், குடிநீர், மருந்துகள் மற்றும் குளுகோஸ் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய அவசர உதவி பெட்டகத்தை தயாராக வைத்திருக்க வேண்டும்.

தமிழக முதல்வர் அறிவுரைகளின்படி புயல் மற்றும் கனமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாவட்ட நிருவாகங்கள் மேற்கொள்ள வேண்டும்.இந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர்வள ஆதாரத் துறை, கூடுதல் தலைமைச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கூடுதல் தலைமைச் செயலர், உள்துறை கூடுதல் தலைமைச் செயலர், எரிசக்தி துறை, கூடுதல் தலைமைச் செயலர், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர், காவல் தலைமை இயக்குநர், சென்னை நகர காவல் துறை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், பேரிடர் மேலாண்மை, இயக்குநர், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கூடுதல் இயக்குநர், கடலோர காவல்படையின் அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குஜராத்தில் வரலாற்று வெற்றியுடன் மீண்டும் பாஜக ஆட்சி; இமாச்சலைக் கைப்பற்றியது காங்கிரஸ்




குஜராத்தில் வரலாற்று வெற்றியுடன் மீண்டும் பாஜக ஆட்சியைப் பிடித்துள்ளது. இமாச்சலப் பிரதேசத்தை காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் கடைசித் தேர்தலாக அமைந்துவிட்ட குஜராத் சட்டப்பேரவை, இமாச்சலப் சட்டப்பேரவை தேர்தலில் பாஜகவும், காங்கிரஸும் தலா ஒரு வெற்றியோடு நிறைவு செய்துள்ளன. இந்தத் தேர்தல் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் அது பற்றிய தொகுப்பு இதோ..குஜராத்தில் வரலாற்று வெற்றி: குஜராத்தைப் பொறுத்தவரை பாஜக தனது சொந்த வரலாற்று சாதனையை உடைத்தது மட்டுமல்லாமல், புதிய வரலாற்றையும் படைத்துள்ளது.

கடந்த 2017 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவுக்கு க்ளீன் ஸ்வீப் என்று சொல்லும் அளவிற்கு வெற்றி வாய்ப்பு அமையவில்லை. அதற்கு காரணம் தேர்தலுக்கு சமீபமாக நடந்து முடிந்திருந்த பட்டிதார் சமூகத்தினரின் இடஒதுக்கீடு போராட்டம். ஹார்திக் படேல் முன்னெடுத்த அந்தப் போராட்டம் பாஜகவுக்கு எதிர்ப்பலைகளை உருவாக்கியது. அதனால் 99 இடங்களைக் கைப்பற்றியது. 100க்கும் கீழான தொகுதிகளில் மட்டுமே வெற்றி என்பது பாஜக தனிப்பட்ட முறையில் சறுக்கலாகவே கருதியது. ஆனால், இந்த முறை வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது பாஜக. கடந்த முறை வாக்குகள் சிதறக் காரணமாக இருந்த ஹார்திக் படேல் இந்த முறை பாஜக வேட்பாளர். அந்த அளவுக்கு தேர்தல் உத்திகளை சிறப்பாக வகுத்து சொன்னபடியே வரலாற்று வெற்றியை பாஜக பதிவு செய்துள்ளது.

ப ா ஜ க 1 5 8 க ா ங் கி ர ஸ் 1 6 ஆ ம் ஆத்மி5பிற3இதுவரை குஜராத் அரசியல் வரலாற்றில் பாஜகவின் கோல்டன் பீரியட் என்றால், அது 2002 ல் அக்கட்சி 127 இடங்களைப் பிடித்ததுதான் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. ஆனால் இப்போது 182 தொகுதிகளில் 158 தொகுதிகளை வசப்படுத்தி வரலாற்றுச் சாதனையை பாஜக பதிவு செய்துள்ளது. குஜராத் தேர்தல் வரலாற்றில் இதற்கு முன்னதாக காங்கிரஸ் 1985ல் 182 தொகுதிகளில் 149 தொகுதிகளைக் கைப்பற்றியதே அதிகபட்ச வெற்றியாக இருந்தது. மங்காத மோடி அலை: குஜராத் தேர்தலுக்காக பிரதமர் மோடி தொடர்ச்சியாக பலகட்டப் பிரச்சாரங்கள், பேரணிகள், ரோட் ஷோக்கள் என்று சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொண்டார். உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், கோவா உள்ளிட்ட ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் மூன்றில் வெற்றி பெற்ற பின்னர் அடுத்த நாள் அதற்கான வெற்றிப் பேரணியை மோடி குஜராத்தில் தான் நடத்தினார்.

உண்மையில் அவர் அப்போதே குஜராத் தேர்தலுக்கான முதல் பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டார். அதற்கான பலன் இன்று கிடைத்துள்ளது. ‘நான் உருவாக்கிய குஜராத்’ என்று அவர் பிரச்சாரத்தைத் தொடங்கியபோது பல்வேறு விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால், எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி மோடி அலை மங்கவில்லை. இன்னும் நாடாளுமன்றத் தேர்தலிலும் பாஜகவின் முகமாக தாமே இருப்பேன் என்பதை அவர் நிரூபித்திருக்கிறார் என்று அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

2017 சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் 77 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் 14 எம்எல்ஏக்கள் பாஜகவிற்கு தாவினர். அதனால் அதன் பலம் சட்டப்பேரவையில் எடுபடவில்லை. இந்நிலையில், இந்தத் தேர்தலில் ஆரம்பம் முதலே காங்கிரஸ் களத்தில் இறங்கி வேலை செய்வதில் விறுவிறுப்பைக் காட்டவில்லை. தோல்வியை முன் கூட்டியே கணித்துக் கொண்டதுபோல் நாங்கள் அமைதியாக காய் நகர்த்துகிறோம் என்று பகிரங்கமாகவே அறிவித்தது. சொல்லப்போனால் 1985க்குப் பின்னர் காங்கிரஸ் குஜராத்தில் தொடர்ந்து தேய்ந்து கொண்டேதான் இருக்கிறது.இந்தத் தேர்தலில் குஜராத்தில் ஆம் ஆத்மி தனது இருப்பை உறுதி செய்தவிதம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

பாஜகவை எதிர்த்து பிரதமர், உள்துறை அமைச்சரின் சொந்த மாநிலத்திலேயே அரவிந்த் கேஜ்ரிவாலும், பகவந்த் மானும் மேற்கொண்ட துணிச்சலான பிரச்சாரம் தான் அதற்கு 4 முதல் 7 தொகுதிகள் வரை கிடைக்கலாம் என்ற நிலையை உருவாக்கியுள்ளதாகக் கருதப்படுகிறது.இமாச்சலைக் கைப்பற்றிய காங்கிரஸ்: இமாச்சலப் பிரதேச தேர்தலைப் பொறுத்தவரை பாஜகவிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது காங்கிரஸ். கடந்த 2017 தேர்தலில் பாஜக 44 என்ற எளிதான வெற்றியைப் பெற்றது. காங்கிரஸ் 21 தொகுதிகளில் மட்டுமே வென்றது. சிபிஎம் ஒரு தொகுதியிலும் சுயேட்சைகள் இருவரும் வென்றிருந்தனர். இந்தத் தேர்தலில் காங்கிரஸுக்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் கூட ஆரம்பக்கட்ட முடிவுகள் ஒரு எளிதான வெற்றியை நோக்கி காங்கிரஸை இட்டுச் செல்லவில்லை.

# இவ்வார ராசிபலன்

## 09-12-2022 வெள்ளி தொடக்கம் 15-12-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** பொறுப்போடும், சிறப்போடும் செயல்படும் வாரம். சோதனைகள் நீங்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிற்று உபாதைகளும் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். தனவரவுகள் பெருகும். முயற்சிகள் பலிதமாகும். செயல்களில் துணிவு கூடும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்லச் செய்திகள் நாடி வரும். வினைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். பெற்றோர்கள் பாராட்டுக் கிட்டும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குடும்ப குழப்பம் அகலும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பரப் பொருள் சேரும். மங்களகரமான செய்தி வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். புகழ் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். கடன் சுமைகள் குறையும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். வாகன மாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். திருப்திகள் அதிகரிக்கும். சுபச்செய்தி வரும். அனுகூலச் செய்தி வந்து சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொழில் லாபம் உண்டு. ஆண்களின் அதிகாரம் உண்டு. சாதகமான வாய்ப்பு அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும் வாரம். சாதனையான எண்ணம் உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பொருள் வரவு ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். மனைவியால் நன்மை உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. பதவி உயர்வு தாமதமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கொடுக்கல், வாங்கலால் திருப்தி தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். சாதனை படைக்கும் காலம். சுப விரயம் கூடும். உடல்பொலிவு கூடும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வந்து சேரும். உண்மைகள் வெளிப்படும். உயர்வுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மனநிம்மதி குறையும். பணியில் பாராட்டு கிடைக்கும். குடும்ப மேன்மை உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். புதிய சிந்தனை மேலோங்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். நலமும், வகையான நன்மையும் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடம் மாற்றம் ஏற்படும். பெருமைகள் கூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். யோக பலம் கூடும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். வறுமைகள் விலகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. விரக்திகள் மறையும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். புத்தி சாதுர்யம் பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. திட்டமிட்ட செயல் வெற்றிமுகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொருளாதாரம் மேம்படும். குடும்ப வளர்ச்சி கூடும். அணிமணிகள் சேரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு லாபம் தரும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. விரும்பிய பொருள் கிடைக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பொதுவிஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,S




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி பெருகும். மருத்துவச் செலவுகள் குறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். புதிய நட்பில் கவனம் தேவை. இடமாற்றத்தால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைத்தூரப் பயணம் ஏற்படும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனோ பயம் அகலும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் வரும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் சலுகைகள் அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. சுபவிரயம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: லஷ்மி குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** திருப்பங்கள் நிறைந்த வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பணியில் பாராட்டு கிட்டும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். எதிர்கால எண்ணம் ஏற்றம் தரும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். சுபிட்ஷங்கள் பெருகும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச்சொத்து சேரும். செயல் திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். புண்ணிய ஸ்தலப் பயணம் ஏற்படும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழித் தொல்லை குறையும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். வீண் வம்பு விலகும். குடும்ப சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். உணவுப்பிரியம் அதிகரிக்கும். பாராட்டுக்கள் பெருகும். பணவரவு தாமதமாகும். புதிய தொழில் வாய்ப்பு அமையும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தன்னம்பிக்கை கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 8,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். சிறிய இடையூறு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்புக் கிட்டும். பகைவர் பணிந்து நிற்பர். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். ஆபரணச் சேர்க்கையுண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மையுண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்யம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. காதலில் மோதல் உண்டு. எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. தொழிலில் நிம்மதி பெருகும். வழக்கு வெற்றி தரும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். தந்தையின் நலம் பெருகும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பொருள் வரவு திருப்தி தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர்கள் நட்பு கிட்டும். மன உற்சாகம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐங்கரன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H




**துலாம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புகழ்ச்சி அதிகரிக்கும். நோய், நொடிகள் அகலும். தங்க நகைகள் சேரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு கூடும். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். போட்டி, பொறாமைகள் விலகும். தொழில் விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். வேலைப்பளு கூடும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். வழிபாடு மாற்றம் தரும். கல்வியில் ஈடுபாடு கூடும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். குதூகலமான காலம். அற்புத வாய்ப்புக்கள் கிட்டும். பெண்களின் ஆலோசனை மாபெரும் வெற்றியை தரும். ஆடை, அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும். பங்குச்சந்தை லாபம் தரும். காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச்செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. மாற்று யோசனை பயன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். திருத்தமான முடிவு ஏற்படும். வியாபாரத்தில் தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மையுண்டு. புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,J




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் நிறைவேறும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய கடன் பாக்கிகளும் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பெண்கள் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. மனதில் நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சனை நிறைவேறும். உறவினர் வகையில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஆண்களின் கோரிக்கை நிறைவேறும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. வாழ்வில் வளம் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு. உலோகத் தொழில் உயர்வு பெறும். குடும்ப லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. பழிச்சொல் தேடி வரும். கையிருப்புகள் கரையும். அந்தஸ்து உயரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தேவைகள் அதிகரிக்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,F

***(தொடர்ச்சி 26 பக்கம்)***

மலேசிய மடல்

# புதிய அமைச்சரவை: 'அன்வாரும் அப்படித்தான்' பிகேஆர் இந்திய தலைவர்களும் தொண்டர்களும் குமுறல்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், டிச.03:

நாட்டின் 10-ஆவது பிரதமராக அடையாளம் காணப்பட்ட டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம், தன்னுடைய தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றுமை அரசாங்கத்தில் தன்னுடையை ஆணையையும் அன்புக் கட்டளையையும் ஏற்று 20 ஆண்டுகளுக்கும் மேலாக பிகேஆர் கட்சியில் செயல்பட்ட ஒரேயொரு தலைவருக்குக்கூட அமைச்சர் பதவி வழங்கவில்லை.

தனக்கு வற்றாத ஆதரவை வழங்கிவரும் இந்திய சமுதாயத்திற்கு-குறிப்பாக தமிழர்களுக்கு இந்த நேரத்தில்கூட உரிய அங்கீகாரம் அளிக்காமல், வேறு எப்போது அன்வார் அளிக்கப்போகிறார் என்னும் ஆதங்கம் பிகேஆரில் மட்டும் அல்ல; ஒட்டுமொத்த இந்திய சமுதாயத்திலும் எதிரொலிக்கிறது.

பிகேஆர் சார்பில் ஓர் இந்தியருக்கு அமைச்சர் வாய்ப்பு அளிக்கப்பட்டால், பாடாங் செராய் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த பத்தாம் பசலி - விட்டில்பூச்சி வாக்காளர்கள், டிசம்பர் 07 - இடைத்தேர்தலின்போது பக்காத்தான் - பாரிசான் கூட்டு வேட்பாளர் சோ.ஃ.பீ ரஸாக்கிற்கு வாக்களிக்காமல் போய்விடுவார்களா என்ன?

மொத்தத்தில், "பத்தோடு பதினொன்று; அத்தோடு இதுவொன்று" என்று தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் சொலவடையைப் போல, மற்ற தலைவர்கள் எப்படியோ, அப்படித்தான் தானும் என்பதை அன்வார் நிரூபித்திருக்கிறார்.

கடந்த கால் நூற்றாண்டாக டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிமை மக்கள் நீதிக் கட்சி - பிகேஆரின் தலைவராக மட்டுமல்ல் இந்த நாட்டின் தலைவராகவும் சமுதாய வழிகாட்டியாகவும் கருதி பல்லாயிரக் கணக்கான இந்தியத் தொண்டர்களும் தலைவர்களும் தங்களின் "உடல்-பொருள் - ஆவி" உள்ளிட்ட அத்தனையையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் அவரின் பின்னால் அணிவகுத்து வருகின்றனர்.

அன்வார் சிறையில் இருந்தாலும் சரி; நாடாளுமன்றத்திற்கு சென்றாலும் சரி; சமூக வீதியில் நடைபயின்றாலும் சரி, அனைத்தையும் சமமாகக் கருதும் தமிழர்கள், தேனீக்களும் வண்டுகளும் தேன் மலரை மொய்ப்பதைப் போல அவரை எப்போதும் சூழ்ந்து நிற்கின்றனர்.

1966-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "எங்கள் வீட்டுப் பிள்ளை" என்னும் திரைப்படத்தில் இடம்பெற்ற "நான் ஆணையிட்டால்" என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் டி.எம். சௌந்தரராஜன்; இசை அமைத்தவர் எம்.எஸ். விசுவநாதன் இயற்றியவரோ வாலி.

ஆனால், அந்த திரை ஓவியத்தைக் காணும் ரசிகர்கள், அந்தப் பாடல் என்னவோ எம்ஜிஆரே இயற்றி, அவரை இசை அமைத்து அவரேப் பாடியதைப் போல அதை "எம்ஜிஆர் பாடல்" என்றேக் குறிப்பிட்டனர்.

அந்தப் பாடலை தமிழ் ரசிகர்களைப் போலவே அன்வாரும் விரும்பினார். காரணம் அவரும் ஓர் எம்ஜிஆர் ரசிகர். அதேவேளை, பிகேஆர் பொதுக் கூட்ட மேடைகளில் அந்தப் பாடலுக்கு அன்வார் அபிநயம் செய்யும் பொழுதெல்லாம், அன்வாரையும் இன்னோர் எம்ஜிஆர் எனக் கருதி பிகேஆர் இந்தியத் தொண்டர்களும் தலைவர்களும் புரிந்த ஆர்ப்பரிப்பிற்கும் ஆர்ப்பாட்டத்திற்கு அளவில்லை.

2020 இல் அன்வார் பிரதமர் ஆக முடியாமல் மடைமாற்றம் செய்த துன் மகாதீரையும் அவர்வகுத்தத் திட்டத்தின்படி அணிதாவி ஆட்சிக் கலைப்பிற்கு அச்சாரமிட்ட டத்தோஸ்ரீ அஸ்மின் அலி, டத்தோஸ்ரீ ஹிஷாமுடின், தான்ஸ்ரீ முகைதீன் உள்ளிட்டோரையும் பிகேஆர் தமிழர்கள் மனதிற்குள் சபித்தனர்.



15-ஆவது பொதுத் தேர்தலில்கூட, தேர்தல் நடைபெற்ற அன்று ஏறக்குறைய இரவு 11:00 வரை அன்வார் எப்படியும் பிரதமர் ஆகிவிடுவார் என்று உற்சாக துல்லலில் இருந்த இந்தியர்கள், அதன் பின்னர் 15-ஆவது பொதுத் தேர்தல் மூலம் நாட்டில் அமைந்திருப்பது தொங்கு நாடாளுமன்றம் என்பதையும் எந்தக் கூட்டணிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பதையும் அறிந்து, தங்கல் வீட்டு திருமணம் நின்றதைப் போன்ற மனநிலக்கு ஆளாகினர்.

தேர்தல் வரை, பெரிக்காத்தான் கூட்டணியையும் தேசிய முன்னணியையும் சம தொலைவில் வைத்த பிகேஆர் இந்தியத் தலைவர்களும் தொண்டர்களும், தேர்தலுக்குப் பின் தேசிய முன்னணியின் ஆதரவைப் பெற்றாவது அன்வார் பிரதமர் ஆகிவிட வேண்டும் என்று மனப்பால் குடித்தனர்.

எந்த எண்ணம் வீண்போகவில்லை; சமயத்தையும் இனத்தையும் முன்னிறுத்தி அடிப்படைவாத அரசியல் புரியும் பாஸ் கட்சி இணைந்த பெரிக்காத்தான் கூட்டணி ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிடக் கூடாதென்ற பதைபதைப்பில் நெளிந்த மலேசியத் தமிழர்களின் நெஞ்சம் குளிர்கின்றமாதிரி, மலாய் ஆட்சியாளர் மன்றமும் மலேசிய அரசியலில் இன-மத அடிப்படைவாதம் இத்துடன் போதும் என்ற கருத்தை முன்வைத்தனர். நாட்டின் அடுத்த பிரதமராக அன்வார் பொறுப்பேற்க இசைவும் தெரிவித்தனர்.

இத்தனை தடை-களைத் தாண்டி, பிரதமர் பொறுப்பில் அமர்ந்த அன்வார் இப்ராகிம், காலமெல்லாம் தனக்கு படைக்களனைப் போன்று திகழ்ந்துவரும் இந்திய சமுதாயத்தை மதிக்கும் விதமாகவும் அரவணைக்கும் வகையிலும் ஒரு தமிழருக்கு அமைச்சர் வாய்ப்பு அளிக்காமல், பிகேஆர் இந்தியர்களை அடியோடு தட்டிவிட்டிருப்பது, காலத்தால நீக்கப்படாத களங்கம்.


அன்வாரின் ஆணைக்கும் அன்புக் கட்டளைக்கும் ஏற்ப செயல்படுவதுடன் தன்னுடைய சுண்டுவிரல் அசைவிற்கு ஏற்ப, எள் என்றால் எண்ணய்யாக வந்து நிற்கும் இந்தியத் தொண்டர்களை அன்வார் இந்த அளவிற்கு உதாசீனம் செய்திருக்கக்கூடாது.

பக்கத்தான் கூட்டணி சார்பில் ஜனநாயக செயல் கட்சி(ஜசெக)யைச் சேர்ந்த சிவக்குமார் அமைச்சராகி இருக்கலாம். எத்தனை சிவக்குமார் அமைச்சரவையில் இடம்பெற்றாலும் தன்னுடைய தலைமையில் இயங்கும் பிகேஆரைச் சேர்ந்த இந்தியர் ஒருவருக்கு வாய்ப்பளிக்காமல் தவிர்க்கும் மனம் அன்வாருக்கு எப்படி வந்தது?

அடுத்து அறிவிக்கப்பட இருக்கும் துணை அமைச்சர் வரிசையில் எத்தனை இந்தியருக்கு வாய்ப்பளித்தாலும், துணையமைச்சர், துணையமைச்சர்தானே? கேபினட் த்குதிக்கு இணையாகுமா?

மொத்தத்தத்தில் அன்வாரும் அப்படித்தான்!.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**



## பாலன் பிறந்த பரிசுத்தநாள்
### (நிலைமண்டில ஆசிரியப்பா)

-------------------------------

*வள்ளல் ஜேசுபிரான் வந்துதித்த இந்நாளில்*
*கள்ளம் கபடம் கவலைகள் மறந்தே!*
*அனைவரும் அன்பான நத்தார் வாழ்த்தை*
*புனைந்து கூறியே பேருவகை கொள்வோம்*
*தித்திக்கும் பொன்னாளில் திருவருள் பெற்றே!*
*எத்திக்கும் ஒளிவீச ஏற்றவழி செய்வோம்*
*பல்லோரும் கொண்டாடும் பரிசுத்த நாளிதில்*
*எல்லோர்க்கும் உதவியே இறையன்பு பெறுவோம்*
*மருள்நீக்கி மனமெல்லாம் மனிதநேயம் குடியிருக்க*
*அருளாளன் பாதம் அடிபணிந்து தொழுவோம்*
*முத்தாக முதிர்ந்த மூத்தோர் நாமெல்லாம்*
*வித்தகராய் விளங்கி வெற்றிகள் காண்போம்*
*போற்றக் கிடைத்த புனித வாழ்வில்*
*வேற்றுமை களைந்து விவேகமாய் வாழ்வோம்*
*நல்லுறவின் ஜேசுவழி நானிலத்தில் வாழ்ந்துமே!*
*எல்லையிலா அன்பை எல்லோர்க்கும் அளிப்போம்*
*சொற்போர் தவிர்த்துச் சுமுகமாய் வாழ்ந்துமே!*
*நற்பணி புரிந்தே நாடுபோற்ற வாழ்வோம்*
*கரம்நீட்டிக் காத்திடும் கனடா மண்ணில்*
*வரம்பெற்ற மனிதராய் வாழ்ந்து காட்டுவோமே!*

-------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**


கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START
வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)





**தனுசு:** எதிரிகளால் ஏற்றம் அதிகரிக்கும் வாரம். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். காதல் எண்ணம் உருவாகும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் உண்டு. உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். வாய்ப்புக்கள் பெருகும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் மிகுதியாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. பழையக்கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. சிக்கனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். மாணவர்கள் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச் செய்திகள் வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். தந்தையின் உடல்நலம் சீராகும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பெண்களால் மதிப்பும், மரியாதையும் உயரும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மகரம்:** சாமர்த்தியமாக செயல்படும் வாரம். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பருப்பு தானம் பாவம் போக்கும். ஊக்கம் அதிகரிக்கும். வருமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணங்கள் மேலோங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். உலோகத்தொழில் லாபம் தரும். தாய் உடல்நலனில் அக்கறை தேவை. நிதிப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும் வருமானம் கைகூடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். புதிய வாய்ப்பு வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அக்னி லிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,P





**கும்பம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். பொன், பொருள் சேர்க்கையுண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். மறைமுகமாக தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்றுப்போக்கு வரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணவரவு உண்டு. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனஅமைதி கிடைக்கும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் களை கட்டும். மனோ தைரியம் அதிகரிக்கும். சுப விரயம் கூடும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வு அமையும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். ஆலய தரிசனம் அமைதியைத் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். பெண்களால் மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்புவட்டம் பெருகும். வராத கடன் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வாழ்வுநிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**மீனம்:** திறமைகள் அதிகரிக்கும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய் வழி உறவில் நன்மை உண்டாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும்.
சகோதர வழியில் சந்தோஷம் உண்டு. உறவினரால் நன்மையுண்டு. எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். பயணம் வெற்றி தரும். விரயங்கள் அதிகரிக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். திடீர் மாற்றம் நன்மை தரும். மங்கள நிகழ்ச்சிகளிலிருந்து பங்குப் பெறுவீர்கள். புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விரோதங்கள் விலகும். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I

# IN MEMORIAM

## *The Late Mr and Mrs. T. Paramanantharajah*



**Thiyagarajah (Para) Paramanantharajah**
*Born to Serve: June 11, 1924*
*Called to Eternity: Dec 13, 1984*

**Pooranam (Balesh) Paramanantharajah**
*Born to Serve: March 29, 1932*
*Called to Eternity: Nov 22, 2001*

**Appa and Amma** *every time you fed us - the first scoop that you served us was* **LOVE.**
*The second scoop was* **UNITY**. *The third scoop was* **STRENGTH** *and* **COURAGE.**
*Many parents do noble things, but both of you have surpassed them all.*

**Appa and Amma** *your affection was a driving force to accomplish and to overcome every hurdle. Whenever we press the replay button the little things that both of you did throughout our lives stands evergreen. When the calamities of the day-to-day routine had got us down, your touch was a cure that no doctor could prescribe.*

**Appa and Amma** *thank you for the sacrifices you have made for us.*
*Thank you for being one of the greatest parents.*

**We Love You Appa and Amma**

*Your Loving Children and Family*

**Siva Para Sivananthan - Nalayini Kumar - Esa Para Esananda - Ganesh Para Ganeshananda**

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca



26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524



உதயம் 1392 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 9, 2022


# Ontario's Minister Stephen Lecce able to reach a tentative agreement following the support of a large number of CUPE members

## கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கத்தின் அதிகளவு உறுப்பினர்களின் ஆதரவைத் தொடர்ந்து தற்காலிக உடன்படிக்கையை எட்ட முடிந்தது மகிழ்ச்சி என்கிறார் ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே



(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

# புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம் நடத்திய சிறப்பான "சினேகம் – 2022" பல்சுவை நிகழ்ச்சி



கனடாவில் பல வருடங்களாக இயங்கிய வண்ணம் பல சேவைகளை ஆற்றிவரும் "புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம்" நடத்திய சிறப்பான "சினேகம்-2022" பல்சுவை நிகழ்ச்சி கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சங்கத்தின் தற்போதைய தலைவர் சிரீனிகேதன் பாலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பல்சுவை நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தியதன் மூலம் புங்குதீவு மண்ணின் அவசர மற்றும் அவசரத் தேவைகளைக் கவனிக்கும் வகையில் சில திட்டங்களுக்கு நிதி சேகரித்து அனுப்பும் வகையில் செயற்படவும் அங்கு செயற்திட்டங்கள் அறிவிக்கப்பெற்றன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# கனடா ஸ்காபுறோ நகரில் தமது KEYBOARD TALENT SHOW நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திய பைரவி நுண்கலைக் கல்லூரியின் மாணவிகளான மூன்று சகோதரிகள்



கனடா ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் "பைரவி நுண்கலைக் கல்லூரி"யின் மாணவிகளான அற்ஷானி லீனஸ், கேஷினி லீனஸ் மற்றும் றேசல் லீனஸ் ஆகிய மூன்று சகோதரிகள் தமது **KEYBOARD TALENT SHOW** நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றார்கள்.

ஸ்காபுறோவில் அமைந்துள்ள "தமிழிசைக் கலா மன்றத்தின் கலையரங்கில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற இந்த **KEYBOARD TALENT SHOW** நிகழ்ச்சியை பைரவி நுண்கலைக் கல்லூரியின் நிறுவனரும் மூன்று சகோதரிகளின் குருவுமாகிய ஜெயச்சந்திரன் தியாகராஜா அவர்கள் தனது குழுவினருடன் இணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இங்கு காணப்படும் படத்தில் **KEYBOARD TALENT SHOW** நிகழ்ச்சியின் "கதாநாயகிகளான" அற்ஷானி லீனஸ், கேசினி லீனஸ் மற்றும் றேசல் லீனஸ் ஆகிய மூன்று சகோதரிகளை மேடையில் அவர்களது குரு ஜெயச்சந்திரன் தியாகராஜா . "கனடா உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கவிஞருமாகிய ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் கௌரவிப்பையும் காணலாம்.

# தமிழகத்துக் கவிஞர் 'அன்புடன் புகாரி' யின் இரண்டு கவிதை நூல்கள் ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் வெளியிடப்பெற்றன



கனடா வாழ் தமிழகத்துக் கவிஞர் 'அன்புடன் புகாரி' யின் இரண்டு கவிதை நூல்கள் ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் வெளியிடப்பெற்றன 'நயாகரா சொல்லும் சாரல் வாழ்த்து', 'அன்புடன் நயாகரா' ஆகிய கவிதைத் தொகுதிகள் வெளியீட்டு விழா கடந்த 3ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஸ்காபுறோ நகர சபை சபா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா வாழ் தமிழகத் தமிழர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பல்வேறு துறைகள் சார்ந்த அன்பர்கள் கலந்து கொண்ட நூலின் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர். (உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)

# Jaffna Central College Old Boys' Association - Canada celebrated its 30th Successful Year

## கனடாவில் இயங்கிவரும் "யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்" சங்கத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்" சங்கத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. (தொடர்ச்சி 3ம் பக்கம்)

# அமெரிக்கா டெக்சாஸ் நகரில் 7 வயது சிறுமியை கடத்தி கொலை செய்த FedEx நிறுவன சாரதி





அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் 7வயது சிறுமியை காரணம் எதுவுமின்றி கடத்திச் சென்று கொலை செய்த **FedEx** நிறுவனத்தின் சாரதி ஒருவர் தற்போது சட்டத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார். மேற்படி **FedEx** நிறுவனத்தின் சாரதி அதீனா ஸ்ட்ராண்ட் என்னும் 7 வயது சிறுமியை அவரது வீட்டிலிருந்து கடத்திச் சென்று கழுத்தை நெரித்ததை நீதி மன்றத்தில் ஒப்புக்கொண்டார். (தொடர்ச்சி 3ம் பக்கம்)


புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL

COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136